Registered as a Newspaper in Ceylon)
P. M. G. No. H. A. 59/300 of 1939.

சிவமயம்

விரோதி ஞு (1889) ஆவணியூ உஅ ௳ ஆரம்பமானது

# இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

**பத்திரக்கிரயம்**

வருஷம் ஒன்றுக்கு யாழ்ப்பாணப்பட்டினசங்களெல்லைக்குள்

| | |
|---|---|
| தமிழ் ரூபா 5·00 | இங்கிலீசும் தமிழும் 9·00 |
| இலங்கை இந்தியா 8·00 | இங்கிலீசும் தமிழும் 12·00 |
| தொலைவாய்ப்பகுதி 9·00 | இங்கிலீசும் தமிழும் 13·00 |

தனிப்பிரதி சதம் 5

முற்பணமனுப்பினலன்றிக் கவனிக்கப்படமாட்டா

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசனெந்தை யிணையடி நீழலே.

—அப்பர் சுவாமிகள்

**விளம்பர விகிதம்**

முதன்முறைக்கு

| | |
|---|---|
| ஒருகலம் ரூபா 10·00 | அரைக்கலம் ரூபா 5·50 |
| காற்கலம் ரூபா 4·00 | ஒருஅங்குலம் ரூ. 1·00 |

அடுத்தமுறைகட்கு மேற்படி விகிதங்களிற்பாதி
காலம் நீடித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்து மூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

புத்தகம்—ருக | யாழ்ப்பாணம்:— பிரமாதி ஞு வைகாசி மீ கஉ (1939 மே 15 திங்கட்கிழமை) | இலக்கம் கo

## சிரஞ்சீவி

"சாலிவாஹனன்"

ராஜ்யங்களையும், ராஜாங்க முறைகளையும், நாகரிகங்களையும் தன்வலிமையால் நிர்மூலம் செய்து செல்லும் காலக்கிழவனுக்கு இரக்கம் கடுகளவுகூட இல்லையென்பது உண்மைதான். ஆனால் இந்த இரமற்ற காலதேவனையும் இளவரசனான குர்ரத்தின் காதல் வென்றுவிட்டது. அதன் பலன்தான் இந்த நித்யத்வம். இளவரசன் குர்ரம் அரசனாக மாத்திரமிருந்து மடிந்திருந்தால் நிச்சயமாய் அவன் கீர்த்தி இந்தக் கால வெள்ளத்தில் புதையுண்டுபோயிருக்கும்! ஆனால் அவன் உணர்ச்சிவசப்பட்டான்! உன்னதமான அன்பு பூண்டான். உலகத்தினர் ஊழிகாலம் வரையில் தன்னை மறக்க முடியாதவாறு ஆக்கிக்கொண்டுவிட்டான். காலனின் கல்மனத்தையும் இந்த உண்மை உணர்ச்சி கரைத்துவிட்டது! அவன் சிரஞ்சீவியாய் விட்டான்.

அன்று நௌரோஜ் (பார்ஸியப் புதுவருஷப் பிறப்பு) பண்டிகை! தில்லி சக்கரவர்த்தியின் அந்தப்புரத்தில் ஆரவாரம் எல்லை கடந்துவிட்டது. குதூகலத்தின் பெருக்கு, தலைதெறிக்கும் வேகத்தில் இருந்தது. ராஜ்யத்திலுள்ள உயர்ந்த உத்தியோகஸ்தர்கள், பிரபுக்கள், சிற்றரசர்கள் ஆகியோரின் குடும்பத்து ஸ்திரீகளெல்லாம், அந்தப்புரத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்த அந்தக் கடைத்தெருவில் வியாபாரிகளாக விற்பனை செய்துகொண்டிருந்தார்கள். "இங்கே வியாபாரம் செய்ய வருபவர்கள் பேரம் பேசவே கூடாது; பேசாமல் கடைக்காரிகளாயிருக்கும் அழகிகள் கூறும் விலையைக் கொடுத்துவிடவேண்டும்" என்பது சக்கரவர்த்தி ஜஹாங்கீர் ஆக்ஞை! சிரிப்பும் களிப்பும் பெருக்கெடுத்து ஓடியதால் அங்கிருந்தவர்கள் எல்லோரும் இன்பவெறியில் இருந்தனர்.

இளவரசன் குர்ரம் தன் பரிவாரங்கள் சூழ ஒவ்வொரு கடையாய் நுழைந்து ஏதோ கொஞ்சம் வியாபாரமும் வேடிக்கையும் செய்துகொண்டே வந்தான். அழகாய் அலங்கரிக்கப்பட்டதொரு கடையில் நுழைந்தான். அந்தக் கடையின் வனப்பைவிட அதிலிருந்த யுவதி அர்ஜுமந்த்பானுவின் வண்டுவிழிகளும், கொவ்வை அதரமும், முல்லை முறுவலும் எல்லாவற்றிற்கும் மேலாக யௌவனத்தின் லாவண்யந்தான் அதிக அழகுடையனவாய் அவனுக்குத் தோற்றின. அந்தக் கட்டழகியின் முகத்தைப் பார்த்துக்கொண்டே ஸ்வப்பனத்தில் நடப்பவன்போல் கடைக்குள் நுழைந்தான். அவன் ஜீவியமுழுவதும் எங்கும் காணாத ஓர் அபூர்வ அழகை அன்று அர்ஜுமந்த்பானுவின் முகத்தில் கண்டுகொண்டான்.

பல்லாயிரம் ஆண்டுகள் வரை இளமையுடன் இருக்கப்போகிற ஓர் அன்பை அன்று அடையப்போகிறோம் என்று அவன் கனவுகூடக் காணவில்லை. தன்னையும், தன் பரிவாரங்களையும், சுற்றியுள்ள கூட்டத்தையுங்கூட மறந்துவிட்டான். அறிவை அன்புப்போதை சூன்யமாக்கிவிட்டது. அப்பொழுதுதான் மலர்ந்த யுவதியான அழகி அர்ஜுமந்த்பானுவும் தன் உணர்ச்சிக் கடலின் கொந்தளிப்பை, எதிர் அலைகளின் மோகனங்களைச் சமாளித்துக்கொள்ளமாட்டாமல் தத்தளித்துவிட்டாள். அச்சில விநாடிகளில் அவள் சித்தக்கடலில் ஏற்பட்ட கொந்தளிப்பின் கொடுமையை எவருமே சகித்திருக்க முடியாது. தன் கணவன் ஜமால்கானைப் பற்றியாவது, கணவன் ஒருவன் இருக்கிறான் என்பதைப்பற்றியாவது, அவள் எண்ணினாளில்லை. க்ஷணநேரத்தில் உலகம்உள்ளளவும் கொண்டாடப்போகிற புனித அன்பு அந்த இரு யௌவனநெஞ்சுகளையும் அணைத்து அவற்றை ஆக்கிரமித்துக்கொண்டுவிட்டது.

இளவரசன் குர்ரம் சமாளித்துக்கொண்டு விட்டான். கடைக்கார யுவதி அர்ஜுமந்த்பானுவின் மனப்புயலும் அடங்கியது. புயலடித்து ஓய்ந்ததுபோலிருந்தது அவ்விருவர் நெஞ்சிலும். உள்ளே சென்று அங்கே வைத்திருந்த ஏதோ ஒரு சிறு பொருளை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு இளவரசன் அதன் விலையைக் கேட்டான். அழகி அர்ஜுமந்த்பானு ஒரு பெருந் தொகையைக் கூறிச் சிரித்தாள். உலகம் முழுவதுமே கையிலிருந்தால் அதை அந்த ரூபவதியின் முன் வைத்து மண்டியிடத் தயாராயிருந்த இளவரசனுக்கு இதென்ன பிரமாதம்? அன்பெனும் ஆலம் உண்டார்க்கு அற்பமாம் மணியும் பொன்னும்! அன்று போகும்போது பொருளை மாத்திரமன்றி மனத்தையும் அந்த நங்கையிடம் அளித்துச் சென்றுவிட்டான்.

இளவரசன் குர்ரத்தின் அரமனையில் முனிந்துகொண்டிருந்தது. பூர்ணசந்திரனைக் கண்ட கடற்கன்னி பூரிப்புக்கொண்டு பொங்கிப் பூரிக் கொந்தளிப்பாள் என்று கூறுவர்; ஆனால் அன்று இந்த வெள்ளிநிலவு அவர்கள் உள்ளத்தில் உண்டாக்கிய உணர்ச்சிப் பொங்கலை—உள்ளக் கொந்தளிப்பை—மிஞ்சியது உலகில் ஒன்றுமேயில்லையென்று கூறிவிடலாம். தங்களையே மறந்து ஒருவரையொருவர் தழுவியவாறே மூர்ச்சையுற்றவர்களைப்போல் இருந்தனர்; வாய்க்கு வேலையில்லை. உணர்ச்சிக் கலங்கள் இரண்டு ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டு தத்தளிக்கையில் பேச்சு எப்படி எழும்?

தன் அறிவை ஹதம் செய்துவிட்ட அர்ஜுமந்த்பானு, ஜமால்கானின் மனைவியென்பதைக் குர்ரம் நன்றாய் அறிந்திருந்தான். அர்ஜுமந்த்பானு தன் காவல், கட்டு, வழக்கு முதலியவற்றைப்பற்றி எண்ணினாளோ இல்லையோ தெரியவில்லை; ஆனால் இளவரசனும் அழகியும் கானகத்துப் பறவைகள் காதலுற்றதுபோல நிர்ப்பயமாய் ஸங்கோசமில்லாமல் களித்துக்கிடந்தனர் மூன்று நாட்கள். அன்பன் குர்ரத்தோடு களித்த மூன்று நாட்களும் மூன்று நிமிஷமாகத்தான் அவளுக்குத் தோன்றின. மூன்று நாட்களான விவரம் அவளுக்குத் தெரியாது.

தம் இளம் மனைவி காதல் பிரயாணத்தைத் தொடங்கிவிட்ட செய்தி ஜமால்கானுக்குத் தெரிந்தது. மூன்று நாட்களுக்குப்பின் வீடு திரும்பிய அந்த யுவதியை, 'தலாக்' (விவாகரத்து) செய்து விடுவதாக வெருட்டினான். கலக்கமடைந்த கட்டழகி தன் காதல் துணைவனிடம் புகார் கூறினாள். அடுத்த நிமிஷமே, அர்ஜுமந்த்பானுவின் கணவனைக் கொன்றுவிடும்படி ஆசாக்ஞை பிறந்தது. ஜமால்கான் புத்திசாலி; சமயோசித புத்தியுள்ளவன், வாழ்க்கை வெள்ளத்தில் மிதந்து சென்ற தன் மனைவி காதல் துறையில் கரையேறிக் கடைத்தேறிவிட்டாள் என்பதை அறிந்துகொண்டான்.

தன் உயிரைப் பலிபீடத்தில் சமர்ப்பிப்பதற்குமுன் தன் சாதுர்யத்தை உபயோகித்தான். இளவரசன் குர்ரத்தின் முன்னால் பணிந்து நின்று, "சக்கரவர்த்தியின் மகனுடைய அன்பிற்கும் ஆதரவிற்கும் ஆளான ஒரு பாக்கியசாலியைச் சக்கரவர்த்தியின் அடிமையான நான் உரிமை பாராட்டி அனுபவிப்பது சரியல்ல என்று எனக்குப் பட்டது. அதனால்தான்......" என்று ஜமால் பேசினான். இந்தச் சமயோசித வாக்குவன்மை, வந்த மரணத்தை வென்றுவிட்டது. அடுத்த க்ஷணம் மரணத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டான். அதுமட்டுமா? சக்கரவர்த்தியின் பரிவாரங்களில் ஒருவனாகவும், ஐயாயிரம் குதிரை வீரர்களுக்குத் தலைவனாகவும் ஆக்கப்பட்டான்.

லௌகிக உணர்ச்சிகளுக்கும், விவகாரங்களுக்கும் மேம்பட்ட இவர்கள் அன்பு மனங்கலந்து ஒன்றுபட்டது. படைமையும் கற்பும் கட்டும் காவலும் அறியாத காதல் வெற்றிபெற்றது. அன்பின் அணியாகிய அர்ஜுமந்த்பானு இளவரசன் குர்ரத்தின் உரிமைக் காதலியாய் வாழ்க்கை விளக்காய் மாளிகையில் நுழைந்தாள். மூன்று நாட்களுக்குமுன்னே குர்ரத்தின் மனத்தில் நுழைந்துவிட்டாள். இருபது வருஷங்கள் ஷாஜஹான் (குர்ரம்) மனத்தில் தன்னை (அர்ஜுமந்த்பானுவை)த் தவிர வேறு எந்த ஸ்திரீயும் நுழைவதற்கில்லாமல் அன்புப்பாசம் அதில் வார்த்துக்கொண்டிருந்து மறைந்தாள். இந்த மகோன்னத அன்புதான் இன்று யமுனா நதிக்கரையில் அழகின் கோயிலாய், அன்பின் பொக்கிஷமாய், சலனமற்ற கனவாய் நித்யத்வம் பெற்று ஆக்ராவில் ஒளிவீசி நிற்கும் தாஜ்மஹால் என்னும் காதல்கவிதை. சிரஞ்சீவித்வம் பெற்ற காதலின் கனவு அது. இதன் நித்யத்வத்தை மறப்பவர்களும் உலகிலுண்டோ?

—கலைமகள்

### திருவதிகை வீரட்டானம் திருநேரிசை

பொய்மிகுன்மிடைந்தபோர்வை
புரைபுரையழுகிவீழ
மெய்யனுய்வாழமாட்டேன்
வேண்டிற்றேன்றைவர்வேண்டார்
செய்யதாமரைகளன்ன
சேவடியிரண்டுங்காண்பான்
ஐயநானலந்துபோனே
னதிகைவீரட்டனீரே.

—திருநாவுக்கரசு சுவாமிகள்

## சிவபூசை

(வண்ணை, ஆசிரியர், பிரம்ம ஸ்ரீ. க. வை. ஆத்மநாத சர்மா எழுதியது)

### சிவபூசை இன்னதென்பது

பிறவியைப் பிணியென்பர் அறிஞர். உயிர் நிலை பெற்றது. உடல் நிலையற்றது. உயிர் உடலோடு கூடுவதே பிறவியாகும். பிறவி பிணியாமாறு எங்ஙனம்? அஃது உடலுக்கு வரும் ஏனைய சாதாரண பிணிகளைப் போலன்றி, உயிரைப் பீடிக்கும் பெரும் பிணியாகும். உடலுக்கு வந்த பிணியை ஓரளவுக்கு நீக்க வல்லவர் உலகத்திலுள்ள வைத்தியர்களாவர். உயிருக்கு வந்த பிணியாகிய பிறவி நோயைக் களைந்து நித்திய சுகத்தைக் கொடுக்க வல்லவர் சர்வலோகைக நாயகரும் வைத்தியேஸ்வரர் என்னும் காரணப் பெயர் பெற்றவருமாகிய சிவபெருமான் ஆவர். நிலையற்ற உடலைச் சிலகாலத்திற்காவது சுகநிலையில் வைத்திருப்பதற்கு நாம செய்யும் முயற்சியே உலகவைத்தியமாம். நிலைபெற்ற உயிரை நித்திய சுகநிலையை யடையச் செய்யும் முயற்சியே சிவபூசையாகும். ஆகவே அதனைச் சிறிது ஆராய்வாம்.

### இல்வாழ்வான் பிறவிப்பிணியை நீக்கும் உபாயம்

பிறவிப்பிணிக்கு மருந்து கொடுப்பது இலேசான கருமமல்ல. ஏன்? உடலுக்கு வந்த பிணிக்கு வைத்தியஞ் செய்விக்கவேண்டுமானால், முதலில் நாம் யார்? எங்கே இருக்கிறோம்? நமது உடலுக்கு வந்த நோய் எத்தகையது? அதை எந்த வைத்தியரிடம் காட்டினால் தீரும்? அத்தகைய வைத்தியர் எங்கிருக்கிறார்? அவரைக் காணும் வழிவகை களியாவை? அதற்குச் செய்ய வேண்டிய முயற்சிகளெவை? என்பனவாதிய வினாக்களுக்கு விடைகளை அறிந்துகொள்ளவேண்டும். பின்பு அவ்வாறே முயலவேண்டும். மேற்கூறிய வினாக்களுக்கு விடைகளை அறிதல் உலகியலறிவு பெற்ற எவருக்கும் இலகுவானதே. அவ்வாறு முயலுவதும் கூடும் எனலாம். ஆனால், பிறவிப் பிணியின் வைத்திய விஷயமாக மேற்கூறிய வினாக்களுக்கு விடைகளை ஆராய்வாம். உயிர்களாகிய நாம் எல்லா நிலையிலும் நம்மை யறிய வல்லவரல்லேம். மனிதப் பிறவி யெடுத்தபோது மாத்திரமே உயிர்கள் பகுத்தறிவோடு காணப்படுகின்றன. நல்லதனலும் தீயதன்றிதும் இவையெனப் பிரித்து அறியமாற்றலே பகுத்தறிவெனப்பட்டது.

அதனால் மனிதப்பிறவி அருமையுடையது. இதுபற்றியே,

"அரியது கேட்கின் வரிவடி வேலோய்!
அரிது அரிது மானிடராதலரிது
மானிடராயினுங் கூன் குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தலரிது
பேடு நீங்கிப் பிறந்தகாலையும்
ஞானமுங் கல்வியு நயத்தலரிது
ஞானமுங் கல்வியு நயந்தகாலையும்
தானமுந்தவமுந்தான் செயலரிது
தானமுந் தவமுந்தான் செய்வராயின்
வானவர்நாடு வழிதிறந் திடுமே."

என்றார் ஔவைப் பிராட்டியார். மனிதப்பிறவி யல்லாத அற்ப ஜந்துக்களாகப் பிறக்க நேர்ந்தால் சர்வலோகைக நாயகராகிய சிவபெருமானையடைய வழிவகை தோன்றாமல் பின்னும் கீழ்மை நிலையெய்த நேரும் என்பதையுன்னியே "புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடியென்மனத்தே வழுவாதிருக்க வரந்தரல் வேண்டுமிவ் வையகத்தே." என்றார் வாகீசப்பெருந்தகையார். தன்னையறிந்தவன் தலைவனை யறிவான். மனிதப்பிறவி யெய்தினும் தன்னை யறிவதற்குத் தகுந்த கல்வி கற்கவேண்டும். கற்றல் மாத்திரம் அமையாது, கல்லறிவு பெறவேண்டும். பெற்ற அறிவினுற் பயனடைவதற்கு நல்லோர் கூட்டுறவு வேண்டும். இதுவே ஒருவனை உய்யும் வழியைக் காட்டுவதாகும். நாம் இருக்கும் இடமோ கர்மபூமியாகும். இது இன்பமனுபவிக்கும் தேவர்களுக்குரிய போக பூமியினும் விசேடமுடையது. ஏனெனில், ஈட்டிய நல்வினை காரணமாகப் போக பூமியில் இன்பந் துய்த்தவர்கள் திரும்பவும் இக் கர்ம பூமியில் வந்து இருவினையொப்பு-மலபரிபாகம், ஆகிய பக்குவ நிலையை யடைந்தாற்றான் நித்தியவின்பமாகிய முத்தியெய்தலாமாதலி னென்க. இத்தகைய விசேட முடைய பூமியிற் பிறந்துள்ள நமக்குப் பிறவி யென்னும் பெரும்பிணி சேர்ந்துள்ளது. அதனை நீக்க வல்ல வைத்தியர் யாவர் என்னில் வைத்தியநாதர் (பிஷஜாம்பதி) ஆகிய சிவபெருமானவர். அவரிருக்குமிடம் யாதெனத் தேடுவோமேயானால் அவரில்லாத இடம் இல்லை என்பதே விடையாகும். அவரைக் காணும் வழிவகைகளை ஆராயுங்கால், முதலிற் சமயப்பிரவேசஞ் செய்துகொள்ளல், இரண்டாவது ஞானசாத்திரங்களைக் கற்றல், மூன்றாவது கற்றபடி யொழுகல் என்பனவாகும். அவற்றுள் இல்வாழ்வான் இறைவனை யடைவதற்கு ஏற்ற இலகுவான சிறந்த முயற்சி "சிவபூஜை" செய்தலேயாம்.

இதனையே,

"யோனிவழி யேபுதித்தல்
யோனிவழி யேநினைத்தல்
யோனிவழி யேயொடுங்கு
மூர்க்கர்காள்-யோனிவழி
வாராவொருவனையே
வந்தித்தல் யோனிவழி
வாரா வகையருளு வான்."

என்று பெரியோர்கள் தெருட்டியிருக்கிறார்கள்.

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

# இலங்கையின் மகத்துவத்தைக் கெடுக்கலாமா?

## உபாத்தியாயர்களின் வேதனத்தைக் குறைக்க வொண்ணுது!

### "குறைக்க முயல்பவன் சனத்துரோகி"

கண்டியிலுள்ள புஷ்பானந்த சங்க மண்டபத்திலே சென்றவாரம் உபாத்தியாயர்களின் வேதனத்தைக் குறைக்க வேண்டுமென மேலதிகாரிகள் செய்யும் பிரயத்தனத்தைக் கண்டித்து, கண்டி ஆசிரியர்கள் சங்கத்தாரால் ஒரு மகாநாடு கூட்டிப் பல பிரசாரணங்கள் செய்யப்பட்டன.

அச்சமயத்தில் பேராதனை ஆசிரியர் கலாசாலைத் தலைமையாசிரியராகிய கனம் G. B. ஜாக்ஸன் பின்வருமாறு கூறினர்:—

"ஒரு நாட்டிலுள்ள மக்களை மதிப்புடன் உச்சத நிலையில் வாழச் செய்வதற்கு ஏதுவாகவுள்ளது கல்வியாகும். அப்படிப்பட்ட கல்வியின் விருத்தியைக் கெடுப்ப நினைப்பதும் கல்வியூட்டுவதால் வரக்கூடிய செலவைக் குறைக்க முயலுவதும தவருன செயலாகும். கல்விச் செலவைக் கட்டுப்படுத்தல் வேண்டுமென்றும் உபாத்தியாயர்களுடைய வேதனத்தைக் குறைத்தல் வேண்டுமென்றும் எவன் முயற்சிசெய்கின்றானே அவன் ஒன் பொல்லாத சனத்துரோகியாவான். உபாத்தியாயர்களாகவுள்ள உங்கட்கு வேதனங் குறைந்துவிடப் போகின்றதே யென்பதையிட்டல்ல நான் அதிகங் கவலைப்படுவது; இந்த அடாத செய்கையினல் இலங்கையின் மகத்துவங் குன்றிப் போகின்றதே யென்பதையிட்டு நினைக்கும்போது தான் என்னுள்ளம் வருந்துகின்றது"

அவைத்தலைமை வகித்த D.S.A. பீரிஸ் கூறியவை:-

"வித்தியாபகுதி மந்திரியும், அவருடைய நிர்வாகசபையாரும், வித்தியாசபையாரும ஒருமுறையல்ல பலமுறை உபாத்தியாயர்களுடைய வேதனத்தைக் குறைத்து விடல் வேண்டுமென முயற்சி செய்கின்றார்கள். குறுகிய நோக்கமுடையவர்களாகிய இவர்கள் இப்படி முயற்சி செய்வது வேறொன்றாகுமல்ல, இந்நாட்டின் சுதேசபாஷைகளின் விருத்தியைக் குறைத்து விடுவதற்கே யென்னலாம். சுதேச மொழியைப் பயிற்றும் ஆசிரியர்களை மேலேசொல்லப்பட்டவர்கள் மிகவுங் கீழான நிலைமையில் வைத்துவிடப் பார்க்கிறார்கள். இது நல்ல நோக்கமல்ல. இப்பொழுது உபாத்தியாயர்கள் தங்கள் தங்கள் தகைமை தராதரமென்னும் இவைகளுக்குத் தக வேதனம்பெற்று வருகிறார்கள். முதல் வகுப்புத் தராதரம் பெற்ற உபாத்தியாயர் மாசம் 75 ரூபா தொடக்கம் 125 ரூபா வரையில் வேதனம் பெற்று வருகிறார். தராதரப் பத்திரமில்லாத ஒருஉபாத்தியாயர் மாசம் 20 ரூபா தொடக்கமாக வேதனம் பெற்று வருகிறார். இப்படியே மற்றவர்களும் தத்தம் திறமைக்கும் தராதரத்திற்கும் தக வேதனம்பெற்று வருகின்றனர். ஆனல் இப்பொழுது பிரேரிக்கப்படும் புதிய முறையின்படியெனிலோ அப்படி நடக்கமாட்டாது. ஒருவர் என்ன திறமையுடையவராயிருந்தாலும் எப்படிப்பட்ட தராதரம் பெற்றவராயிருந்தாலும் ஐந்தாம் வகுப்பில் வைக்கப்பட்டு மாசம் 20 ரூபா இல்லேயேல் 35 ரூபா வேதனம் மாத்திரம் பெறத்தக்கவராவர். இதுவே யோசனையற்ற வித்தியாபகுதியார் பரிபாலனச் செலவைக் குறைக்க வேண்டி உபாத்தியாயர்களுக்கு கஷ்டமாகச் செய்யவிருக்கும் பிரமாணமாகும். இந்தச்செயல் இவ்விலங்கை நாட்டின் பொதுவான பிரமாணத்திற்கு கேர்விரோதமானதாம்.

கல்வியை விருத்திபண்ண வேண்டுமேயானல் வித்தியாசாலைகளில் நூற்றுக்கு ஐம்பது விகிதமான உபாத்தியாயர்கள் பயிற்றப்பட்ட உபாத்தியாயர்களாயிருத்தல் வேண்டும். வித்தியாபகுதி யதிகாரிகளின் நோக்கம் இந்நாட்டிலே கல்வியை விருத்திபண்ணுதலாகவல்லவா இருக்கவேண்டும். புதிய பிரமாணங்கள் நிறைவேற்றப்படுமானல் இந்நாட்டின் சுதேசமொழிகளின் கதி கயமோசகத்தாற் பீடிக்கப்பட்டவனுடைய கதி போலாகும். வித்தியாபிமானிகளாயுள்ளாரெவரும் சுதேச மொழிகளை நன்கு விருத்திபண்ணுதல் வேண்டுமென்ற கொள்கையுடையவர்களாகவே காணப்படுகிறார்கள்.

### வித்தியா மந்திரியின் பொருந்தா நியாயம்

உபாத்தியாயர்களுடைய வேதனத்தைக் குறைப்பதையிட்டு வித்தியா மந்திரி சொல்லும் நியாயம் சிறிதும் பொருந்தாததாய் நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாததாயிருக்கின்றது; வித்தியாதிகாரி செய்யத் துணிந்த செயல், குடர் நோயால் வருந்துபவனுக்கு, அக்குடல் நோயை மாற்ற வைத்தியஞ் செய்வதை விடுத்து அவனுடைய மூளைக்கு வைத்தியஞ் செய்ய முயல்வதுபோ லிருக்கும். வித்தியா பரிபாலனத்தால் நேருஞ் செலவு அதிகப்பட்டு வருகின்றதென மேலதிகாரிகள் பல முறையும்ஓலமிடக் காண்கின்றோம். அந்தச் செலவு எப்படி மேற்பட்டு வருகின்றதென்பதை நாம் இந்த நோக்கில் ஆராய்ந்து பார்க்கத்தான் வேண்டும். வித்தியா பகுதியிலே எத்தனை உத்தியோகத்தர் அளவிற்கு மேற்பட்ட வேதனம் பெற்று வருகின்றார்களென்பதை நாம் சிந்திக்கவேண்டும். வித்தியா பகுதி உத்தியோகத்தருள் மாசம் 1000 ரூபா சம்பளம் பெறுபவர்களும் இருக்கின்றார்களல்லவா? மாசம் 1000 ரூபா பெறுபவருடைய வேதனத்தை 750 ரூபா ஆக்கிவிட்டால் அதனுல் அவருக்கு அதிக கஷ்டம் நேரமாட்டாது.

### அவர்களுடைய வேதனத்தைத்தான் குறைத்துவிடல் வேண்டும்

வித்தியாபகுதியிலே எத்தனையோ உத்தியோகத்தர்கள் விசேஷபதவி பெற்றுமேலதிகமான சம்பளம்பெற்று வருகின்றார்களே! உப வித்தியாதிகாரிகள் நாலு பேர் இருக்கின்றார்கள். பெரும்பகுதி வித்தியாதரிசிகளென்று நாலு பேர் உளர், டிஸ்திரிக் வித்தியாதரிசிகள் எனப் பலர் இருக்கிறார்கள். இன்னும் பல உதவி வித்தியாதரிசிகள் இருக்கின்றார்களே; இவர்கள் பெறும் வேதனம் கொஞ்சமா? இப்படியான உத்தியோகத்தர் ஐம்பது பேருக்கு உதவப்படும் மாச வேதனத்தின் தொகையைக் காட்டிலும் ஆயிரம் உபாத்தியாயர்களின் மாசவேதனத் தொகை குறைந்ததாகும்; 16000 உபாத்தியாயர்களின் வேதனம் எட்டுலட்சம் ரூபாவாகும். ஆனல் இந்தப் பதினாறாயிரம்உபாத்தியாயர்களுடைய வேலைகளைப் பரிசிப்பதற்கும் அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கும் நியமிக்கப்பட்டுள்ள நிலை உத்தியோகத்தர் பெறும் வேதனம் பத்துலட்சம்ரூபாவாகும்; இது அசம்பாவிதமல்லவா?"

### பிரசித்தி பெற்ற சேவை

பாபு ராஜேந்திர பிரசாத், காங்கிரஸ் தலைவர்களிலே அபரிமிதமான ஆற்றல் படைத்தவர். 1934-35-ல் ராஷ்டிரபதி என்றல் ஜீவவேகம் படைத்தவனுக இருக்கவேண்டுமென்பதை முதன் முதலாக நிரூபித்துக் காட்டியவர் அவர். உடல் அசௌக்கியத்தைப் பொருட்படுத்தாமல் தேசத்தின் ஒருகோடியிலிருந்து மறுகோடிவரை காங்கிரஸ் பிரசாரத்துக்காகச் சுற்றுப் பிரயாணஞ் செய்தார். காங்கிரசுக்கு அவர் செய்துள்ள சேவை மட்டும் ஒரு தனிச் சரித்திரமாக எழுதலாம். தற்போது அதிருப்தி கொண்ட காங்கிரஸ்காரர் பலருங்கூட, அவர் தலைமைப் பதவியினல் மனச்சாந்தி அடைந்துவிடுவர்.

—இண்டிபெண்டெண்ட்.

## ஆசிரியர்களுக்கு ஓர் அன்பனின் கடிதம்

அருமைச் சகோதர சகோதரிகளே!

சென்றசிலகாலமாக ஆசிரியர்களின் சம்பள விஷயமாயும் அவர்களின தராதர விஷயமாகவும், பாடசாலைகளின் சராசரி விஷயமாகவும் ஏதோ சில மாற்றங்கள் ஏற்படப் போவதாக ஓர் வதந்தி உண்டாயிற்று. எனினும் இவ் வதந்திகளின் உண்மையை இப்புது வருஷத்துடனேயே அறியலானேம். ஐயன்மீர் யாம் இப்பொழுது இம்மாற்றங்களின் தன்மை திமைகளைச் சீர் தூக்கிப் பார்க்கவேண்டும் என்பதை இப்பொழுதுஇருக்கும் ஆசிரியர்களின் மனத்தில் வற்புறுத்த விரும்புகிறேன். அநேக ஆசிரியர்கள் திட்டங்கள் எல்லாம் புதிதாகச் சேரும் ஆசிரியர்களைத் தான் பாதிக்கும் என்ற நோக்கம் கொண்டு இத்திட்டங்களைப்பற்றி ஓர் ஆரவாரமுமின்றியே இருக்கின்றனர். ஆனல் உண்மையிலே இத்திட்டங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஆசிரியனையும் பாதிக்கும் என்பதை யான் நிரூபிக்க விரும்புகிறேன். இப்பொழுது இருக்கின்ற ஆசிரியர்களைத்தான் வருத்தாதுபோயினும் இனிவரப்போகின்ற ஆசிரியர்கள் யார். நாம கல்வி கற்பித்த மாணவர்களன்றோ? அவர்களை நாம் எமது பிள்ளைகளைப்போல் பேணவேண்டும் அல்லவா? அன்பர்களே! அப்பிள்ளைகளின லன்றோ நாம் நம் பசியை ஆற்ற முடிகிறது. அப்படி நம் பசியைத் தணிக்கும் பிள்ளைகளுக்கு வாயில் மண்ணைக் கொட்டவிடலாமா? இவற்றை நினையுங்கள்! நினைந்து வாயில் மண் கொட்டு பவர்களைத் தடுங்கள்.

ஆகவே, இப்பொழுது எவ்விதங்களில் இம் மாற்றங்கள் எல்லாம் ஆசிரிய உலகத்தைப் பாதிக்குமென்பதை யாராய்வோம்.

முதலாவதாக ஆசிரியர்களை வகுப்பு வகுப்பாகப் பிரிக்கும் முறைப்படியிருக்கிறதெனில், ஐக்கிய சம தத்துவமுள்ள அன்புள்ள குழந்தைகளையுடைய தகப்பன் தன் ஆஸ்திகளை ஒருவர்க்கு மற்றவரிலும்கூடக் கொடுக்க விரும்புவதுபோல் இத்தன்மையான விருப்பம் அவர்களுக்குள் ஒற்றுமையீனத்தை உண்டாக்குவது மாத்திரமேயன்றிப் பல்வேறு தொந்தரவுகளையும் உடன் கொண்டு வரும். தராதரப் பத்திரம்பெற்ற ஆசிரியர்கள் எல்லோரும் ஆசிரிய கலாசாலைகளிலே ஒரே விதமாகப் பயிற்றப்பட்டு ஆசிரிய உத்தியோகத்திற்குத் தகுந்தவர்கள் என்று யோக்கியதா பத்திரம் பெற்றவர்கள் இவர்கள் எல்லோரும் ஒவ்வொரு கிழமையும் இவ்வளவுகால அளவிற்குக் குறையாமல் வேலை செய்ய வேண்டும்; எல்லாரும் ஒரே விதவேலையைச் செய்பவர்கள். ஆனல் அவர்கள் சம்பளம் மாத்திரம் அப்படியன்று. அது அவன் அவன் காலத்திற்குத் தகுந்தபடி ஓர் ஆசிரியன் ஐந்து ஆசிரியர் உள்ள பாடசாலைக்குச் சென்றல் அவனைப்போல் சேவைசெய்த ஒருவன் மூன்றும் வகுப்பிலிருந்து உயர்ந்த சம்பளம் பெற, இவர் ஐந்தாம் வகுப்பிலிருந்து குறைந்தசம்பளம் பெறவேண்டியதே. இது என்ன அநீதி. இப்போது இருக்கும் ஆசிரியர்களே நீங்களும் உங்கள் பாடசாலையினின்றும் இன்னுமோர் பாடசாலைக்குப் போகும்போது இவ்வகுப்புகளில் ஒன்றில் அகப்படுவீர்கள். ஆகவே இச்சட்டம் வருவதை நீவிர் விரும்பினல் உங்கள் முகாமைக்காரர் உங்களைக் குட்டக் குட்டக் குனியவும் ஆயத்தமாயிருக்கவேண்டும்.

ஆசிரியரின் வேதனம் குறைப்பதைப்பற்றிச் சற்றே ஆராய்ந்து பார்ப்போம். கல்வி இலாகாவில அதிகம் செலவழிகின்றதாம். அதற்காக வேதனங்களைக் குறைக்க வேண்டுமாம. இப்பாவேப்பிடித்ததாம் பறைப்பிராந்து ஐயோ ஐயா எத்தனையோ அரசாங்க உத்தியோகத்தர்கள் கல்வி இலாகாவிலேயே 500 ரூபாவும் அதற்கு மேற்பட்ட சம்பளமும்பெற, ஆகக்கூடியது நூற்றுஇருபத்தைந்து ரூபா சம்பளம் பெறுகிற சுவதேசபாஷை ஆசிரியனது சம்பளத்தையும் இருநூற்று ஐம்பது ரூபா பெறும் ஆங்கிலஆசிரியர்களின் சம்பளத்தைத் தானே குறைக்கவேண்டும். இப்படி வேதனத்தைக் குறைப்பது இன்னெருமுறையில் சொல்லுகில் "ஆசிரியர்களே நல்ல புத்தகங்களை வாங்கி வாசியாதீர்கள், உமது நிலைக்குத் தகுந்த பெண்ணை மணவாதீர்கள். சடங்கு செய்யாதீர்கள். ஒவ்வொருவரும் பிள்ளையைப்பெறுதீர்கள்" என்பதுபோன்ற கட்டளைகளை இடுவதே.

இதுமாத்திரமன்று. அரசினரின் கீழ் உத்தியோகம் பார்ப்பவர்களின் உண்மையில் கைக்கூலி வாங்காதவர் ஆசிரியர்களே; இனி இவ்வகுப்பினரும் பிள்ளைகளைச் சித்தி எய்தச் செய்வதற்குப் பெற்றோர்களிடம் கைக்கூலி வாங்கவேண்டியவர்களே.

அடுத்தாற்போல் இப்படி வேதனத்தைக் குறைப்பதினல் உண்மையிற் கெட்டிக்காரர் ஒருவரும் ஆசிரிய உத்தியோகத்தை விரும்பார்கள். அத்துடன் அநேக பிள்ளைகள் கல்வி கற்கவும் விரும்பார்கள். அவர்களைக் கல்விகல்லுங்கள் என்று சொல்வதுமே மிகுந்த பாவம்.

இப்படிச் சம்பளத்தைக் குறைக்க வேண்டுமென்று கல்விச் சபையிற் சொன்னவர்கள் தங்கள் சம்பளத்தைக் குறைக்கின் விடுவார்களோ! அவர்களின் சம்பளத்தைக் குறைக்கப் புகுந்தவுடனே அவர்கள் ஜூரிசென்ற சட்டசபைத் தேர்தலுக்கு இச் சம்பளத்தையும் என் பெண்சாதியின் தாலிக்கொடியையும் நம்பி வெளிக்கிட்டேன். தாலிக்கொடி போய்விட்டது. இனிவரும் தேர்தலுக்கு இவ்வேதனத்தையாவது விடுங்கள் என்று அழுவார்களன்றோ.

சராசரி கூட்டும் விஷயமாகச் சில குறிப்புகள் சொல்லாதிருந்தால் இக்கடிதம் முற்றுப்பெருது இப்பொழுதே சில பாடசாலைகளில் ஓர் ஆசிரியர் ஒரே நேரத்தில் இரு வகுப்புகளைக் கற்பிக்கவேண்டியதாக நேரிடுகிறது. இதைப்பற்றி ஆகச் சில பரிசோதகர்களுக்கும் சுயபாஷைப் பாடசாலை ஆசிரியர்களுக்குமே தெரியும். ஆகவே, ஆங்கில கிட்சாபாடசாலைத் தலைவர்களைக் கொண்ட கல்விச் சங்கம் இதை அங்கீகரித்தல் யாம்அவர்களில் குற்றம் சொல்ல இடமின்று. அவர்களின் அறியாமையிலேயே குற்றம். ஆகவே ஆசிரியர்களே! ஒன்று கூடுங்கள். கூடி உங்கள்தீர்மானங்களை நாட்டுச் சபைக்கு அனுப்புங்கள்.

இங்ஙனம்,
தங்கள் "அன்பன்"

№ 210

## காலியில் மர்மக் கொலை

### றெயில்வேப் பாலத்தின் கீழ்க் காணப்பட்ட சடலம்

நேற்று மாலை பேபேயிலுள்ள றெயில்வேப் பாலத்தின்கீழ்க காது அப்பு என்பவரின் சடலத்தில் கழுத்துத் தண்டெலும்பு உடைந்திருக்கக் காணப்பட்டது.

சட்டவைத்திய அதிகாரி, இவர் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளாரென அபிப்பிராயப்படுகிறார்.

நடப்பு வருடத்திற்குக் காலி போன்ற விபரீதமான கொலை முன்பு ஒன்று நடந்துள்ளது. பாலத்தின்கீழ் உள்ள இரும்புத்தூணில் காது அப்புவின் சடலம் சாய்ந்திருக்கக் காணப்பட்டது. முந்தின இரவு கொலை நடந்திருக்க வேண்டுமென யூகிக்கப்படுகிறது. ஆரம்பத்தில் குறித்த பேர்வழி கால் தவறிக் கீழ்விழுந்ததினல் மரணமடைந்திருக்கலாமெனச் சந்தேகிக்கப்பட்டது. இதன் பயனுக மரணவிசாரணை அதிகாரியும் ஒரு விசாரணையை நடத்தினர். நீதவான் விசாரணை தொடர்பாக நடத்தப்பட்ட வைத்திய பரிசோதனையிற் சடலத்திற்காணப்பட்ட காயங்கள் கீழ்விழுந்ததினல் ஏற்படாதெனக் கூறப்பட்டது.

காலமடைந்தவர் ஒரு நகைவியாபாரியின் கீழ்க் காவலாளராகக்கடமை பார்த்து வந்தார். பொலிசார் புலன் விசாரிக்கின்றனர்.

### சட்டைக்குள் சுண்டெலி

லண்டனில் அலெஸ் திவில் என்பவன் வாங்கிய புதியசட்டையின்கழுத்துப் பட்டைக்குள்ளிருந்து ஒரு செத்த சுண்டெலி அகப்பட்டது. அச் சட்டையை வாங்கியது முதல் அவனுக்கு மனசும் தேகமும் சரியாகவே இல்லை.

முடிவில், இதன் காரணம் செத்த எலிதான் என்பது தெரியவந்தது.

### ஊமையின் பேச்சு

ஜெர்ஸி நகரில் ஏழு வயதுள்ள பிறவி ஊமைச் சிறுவனுன ஜோஸப் லோல்டி என்பவன், தன் அறைஜன்னல் தீப்பிடித்து எரிவதைக் கண்டதும் திடீரென 'அம்மா, நெருப்பு' என்று தன்னையும் அறியாமல்கத்தினன். தன் ஊமைமகன் இவ்விதம்கத்தியதைக் கேட்டதும் தாயார் ஆச்சரியத்துடன் அறைக்கு ஓடி வந்தாள். ஆனல், தாயாரைக்கண்டதும் பேசமுடியாமல் அழுதான்.


## தி மலாயன் டிரேடிங் கொம்பனி
(சிங்கப்பூர்க் கொம்பனி)
இரும்பு, பித்தளைச் சாமான்கள் சிமேந்து வகைகள் விற்பனவு செய்வோர்
பெரியகடை, யாழ்ப்பாணம்.
"புரேப்ரைட்டர்"
K. A. இரத்தினசிங்கம்
Y 275. 4-3-38 to 3-3-39

### யாழ் நகரில் சுத்தமான கோதுமையினல் தின் பண்டங்கள் முதன்மையாய் விற்குமிடமெது?

1865ம் ஆண்டு எஸ். பேதுருப்பிள்ளை அவர்களால் ஸ்தாபிக்கப்பெற்று தற்போது தி பிறீமியர் பேக்கரி என அழைக்கப்படும் றொட்டிச்சாலை மாத்திரமே



இங்கே சுத்தமான கோதுமை அப்பம் விஸ்கோத்து வகைகளும், இனிமையான கேக் சிற்றுண்டி வகைகளும், நவீன முறையில் சுகாதார விதிப்படி மதக் கோட்பாடுகளுக்கு எதிர்ப்பில்லாத சேர்ப்புகளினல் தயாரிக்கப்பெற்று மட்டான விலையில் விற்கப்படும்.

கலியாண காலங்களுக்கும், கல்லூரி ஆண்டுவிழாக் கொண்டாட்டங்களுக்கும் முக்கியமான சிற்றுண்டி விருந்துகளுக்கும், கேக், அதிரச வகைகள் மதுரமாயும் கவர்ச்சியாயும் அதிசகாய விலைக்கு உடன் தயாரித்துக் கொடுக்கப்படும்.

**The Premier Bakery**
(பேதுருப்பிள்ளை றொட்டிச்சாலை,)
Bakers—Confectioners—Caterers

Bankshall Street
Estd. 1865.

Jaffna
'Phone. 44.

Y 160 29-9-38—28-9-39

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல்வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமா னுமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: பிரமாதி௵
வைகாசி௴ ௧௨ திங்கட்கிழமை

## ஸ்தல ஆட்சியா வகுப்புவாதமா?

சென்றவாரம் அரசாங்கசபைக் கூட்டத்திற் சிங்களப் பிரதிநிதிகள் பேசிய பேச்சுக்கள் இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்திற் சுருக்கமாக மொழிபெயர்த்து வெளியிடப்பட்டுள்ளன. அவர்களுடைய பேச்சுக்களை உற்று அவதானிக்கும்போது இலங்கையிலே இப்பொழுது கையாளப்படும் அரசியன் முறை முழுவதும் வகுப்புவாதமேயாகுமென்பதும் ஸ்தல ஆட்சிமுறை என்னவுமில்லையென்பதும் நன்கு புலப்படும்.

அவர்களுள் மொருவக்கைப் பிரதிநிதியாகிய மிஸ்ரர் R. C. கன்னங்கரா பேசியபேச்சுமுழுவதும் நச்சுரையாகும். அச்சிங்கள மகன் இந்திய தமிழரை இலங்கைத் தமிழரை யாழ்ப்பாணத்துத் தமிழரை எல்லாத்தமிழரையும் இடையிட்டு இங்கே குடியேறியவர்களாகவும் இந்திய தமிழரை யார் இங்கே கூப்பிட்டதென்றும் இலங்கை சிங்களருக்கே உரியதென்றும் கருத்தப்பட வெட்கம் காணமின்றித் தம்முடைய ஒடுங்கிய மனப்பான்மையைப் புலப்படுத்திப் பேசியிருக்கிறார். காரணமின்றி இந்திய தமிழரில் அபராதங்களைச் சுமத்துகின்றார். இந்திய தமிழரைப் புறக்கணிப்பதனால் இலங்கைத் தமிழரை இன்னமுந் தனிக்கப்பிடிக்கலாமென்ற நோக்கமே இவருடைய உள்ளத்திற் குடிகொண்டிருக்கின்றதென்பது வெளிப்படை. இவருக்குப் பிறகு எழுந்துபேசிய மிஸ்ரர் அபயகுணசேகராவும் இந்தவிதமாகவே அபிப்பிராயங்கொண்டு பேசியுள்ளார்.

இப்படியாக இச் சிங்களப்பிரதிநிதிகள் சிலர் பேசுவதற்குக் காரணமென்ன? காரணம் ஒன்றுண்டு. உலகத்திலே ஏனைய எல்லாச் சாதியினருக்கும் தங்களுடைய சம்மபூமியில் மாத்திரமல்லாமல் ஏனைய தேசங்களிலும் தங்களோடு தொடர்பான சாதியினர் இருக்கிறார்கள். அயிரோப்பியரிடத்திலும் சீனயப்பானியரிடத்திலும் இஸ்லாமியரிடத்திலும் இந்திய மக்களிடத்திலும் இலங்கை யாழ்ப்பாணத் தமிழரிடத்திலும் இக்கவிதமான தொடர்பு அன்றும் இன்றும் என்றும் உண்டு. ஆனால் இந்த இலங்கையிலுள்ள சிங்களச் சாதியர்க்கெனிலோ இப் பூவுலகத்தில் வேறு எந்தத் தேசத்திலும் எந்த காட்டிலும் எந்த ஊரிலும் எவ்வகையான தொடர்புமில்லையாகும். இச்சாதியின் நிலைமை இன்னும் உற்று ஆராயின் ஆதாரமாயுள்ள ஒருத்திபெற்ற ஒருமகனுக்கு ஒப்பிட்டுச் சொல்லலாம். இந்த நியாயத்தினாற் போலும் இவர்கள் தங்கள் அயலில் வாழும் தமிழரையேனும் தென்னிந்திய தமிழரையேனும் மற்றை எவரையேனும் தம்முடன் அணைத்தலின்றிப் புறக்கணிக்க முயலுகின்றார்கள் தமிழர்களாகட்டும் வேறு எச் சாதியாராகட்டும் இச் சிங்கள மக்களுடன் சேர்ந்து ஒற்றுமைப்பட்டு உழைக்கலாமோ எனின் அந்தக்காரியம் ஒருபோதும் நடக்கப்போவதில்லை. ஏன்? "நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்" என்பதுமுதுமொழியல்லவா?

மேலும் உலகத்திலே, விசேஷமாக அயிரோப்பாவில் யுத்தம் நடப்பதற்கும் பிணக்குகளுக்கும் சர்வாதிகாரிகள் நாடுகளைப் பிடிப்பதற்குங் காரணமென்ன? வகுப்புவாதமேயாம். அவுஸ்திரியாவையும் செய்க்கோஸ்லோவைக்காவையும் ஹேர் ஹிட்லர் கைப்பற்றும்போது காட்டிய காரணம் அந்நாடுகளிலுள்ள தம்மவர்களாகிய ஜர்மனியரை அந்தந்த நாட்டு அரசினர் வருத்துகிறார்கள் புறக்கணிக்கிறார்கள் என்பவையல்லவா? தென்னிந்திய தமிழ் மக்களை இங்குள்ள சிங்களர் புறக்கணிக்கும்போது இலங்கைத் தமிழ்மக்களுக்குப் பெருங் கவலையும் தனிமையும் ஏற்படுமென்பதை இச்சிங்கள மக்கள் நினைக்கின்றிலரன்றோ? பிருத்தானிய அதிகாரத்தில் அடிமைத்திறத்தில் இருந்துகொண்டு இச் சிங்களர் இப்படிச் செய்வாராஞல், நினைக்கத் தலைப்படுவாராஞல் இச் சிங்களருக்குப் பூரண சுயராச்சியங் கிடைப்பின் குதிரை கொம்புகளைப் பெற்றது போலவும் மதங்கொண்ட யற்கடத்தின் வசம் வாட்படையை உதவியது போலவு மல்லவா இருக்கும்.

இனி இவர்கள் விஷயமாக மிஸ்ரர் நடேசையர் ஏதோ சொன்னார் என்பது உண்மையாஞல் அவர் சொன்ன அச் சொல் இவர்களுக்குப் பொருந்தாததல்ல. யாழ்ப்பாணத் தமிழ்மக்கள் தங்களுக்குக் காலந்தோறும் செய்த நன்மைகளையெல்லாம் இப்பொழுது மறந்துவிட்டார்களென்பது இச்சிங்களர் இந்தச் சமயத்திற் பேசும் பேச்சினுலும் கொண்டுள்ள நேசத்தினுலும் செய்யுஞ் செயலினுலும் நன்று அறியக்கிடக்கின்றதல்லவா! அன்று பேசியவர்களுள் அவிசாவலைப் பிரதிநிதியாகிய மிஸ்ரர் குணவர்த்தன பேசியவை மாத்திரம் மிகவும் பெருந்தன்மையானவை யென்று சொல்லத்தக்கன. ஆனல் மட்டக்களப்புத் தமிழ்ப் பிரதிநிதியென்று சொல்லப்படும் மிஸ்ரர் தம்பிமுத்து அச்சமையத்திலே பேசிய பேச்செனிலோ பயனற்றது, சமையத்திற்குத்தகச் சிங்களமக்களைப் பிரியப்படுத்தும் நோக்கமாகப் பேசப்பட்டது. தமிழ் மக்களையும் யாழ்ப்பாணப் பிரதிநிதிகளையும் கவலைப்பிப்பது; இக்காரணங்களைப்பற்றித்தான் அத் தம்பிமுத்துவின் பேச்சு மொழிபெயர்த்து இ பிரசுரத்தில் வெளியிடப்படவில்லை. தமிழனென்று சொல்லிக்கொண்டுதிரியும் தம்பிமுத்துவைக் காட்டிலும் மிஸ்ரர் குணவர்த்தன போன்ற சிங்களமக்கள் சிலர் நமக்கு நனிநல்லார் என்று சொல்லலாம்.

*

## அரசாங்கசபைக் கூட்டம்

### சிங்களப் பிரதிநிதிகள் சிலர் பேசிய பேச்சு

சென்றவாரங்கூடிய அரசாங்கசபைக் கூட்டத்தில் தமிழர் விஷயமாக மொருவக்கைப் பிரதிநிதியாகிய மிஸ்ரர் R. C. கன்னங்கரா பேசிய பேச்சு:—

"சிங்களராகிய நாங்கள் கூடிய உத்தியோகங்களை வகித்துக்கொண்டிருக்கிறேமென்றும், தங்களை உத்தியோக விஷயத்திற்புறக்கணிக்கிறேமென்றும் தமிழர் எங்களைக் குறைகூறக் கேட்டிருக்கிறேன். இப்பொழுதும் தமிழரே அதிகமான உத்தியோக பதவிகளை வகித்திருக்கிறார்களென நான் துணிவுடன் சொல்லுகிறேன், ஹட்டன பிரதிநிதியாகிய மிஸ்ரர் நடேசையர் சிலநாட்களின் முன் மத்தாசம் என்னுமிடத்தில் சிங்களர் நன்றிகெட்டவர்கள் என்று சொல்லியதாகப் பத்திரிகைகளிற் படித்தேன்; அப்படி அவர் சொல்லியது பெருந் தவருகும்."

(இப்படி இவர் சொன்னபோது மிஸ்ரர் நடேசையர் தாம் அப்படிச் சொன்னதில்லை யென்றும் பத்திரிகையின கூற்றுத் தவருனதெனவும் மறுத்தார்.)

பின்னரும் கன்னங்கரா கூறியது:- "இனி, இந்தியத் தமிழர் விஷயமாகச் சொல்லுமில் இந்தியத் தமிழரை இங்கே வரும்படி நாங்கள் கூப்பிடவில்லை. பிருத்தானியர் கோப்பிக்கிசைந்தே அவர்கள் இங்கே வந்தார்கள். இந்தக் கொழும்புப் பட்டினத்திலேயே அதிகதொகையான இந்தியர் வந்து குடிகொண்டு விட்டார்கள்; இவர்கள் சிங்களருக்கு ஏதுந் தொழின்முயற்சி அகப்படவிடாது தாமே எல்லாவேலைகளையுஞ் செய்கின்றார்கள்; இத்தநாடு காட்டுக்கோட்டைச் செட்டிகளின நாடாய் மாறிவிட்டது."

நுவரேலியாப் பகுதிப் பிரதிநிதியாகிய மிஸ்ரர் E. W. அபயகுணசேகரா பேசியது:-

"அரசாங்க உத்தியோகத்தில் சிங்களரைக் காட்டிலும் தமிழரே அதிக பதவிகள் வகித்திருக்கிறார்கள்; தொகையிற் குறைந்த சாதியார்களை ஒற்றுமைப் படுத்துவதற்குச் சிங்களராகிய நாங்கள் எம்மாலியன்ற முயற்சி செய்துவருகிறோம்; சிங்களமகாசபையையிட்டு பலர்பெரிதும் ஆத்திரப்படுகிறார்கள்; இங்குள்ள மற்றைச்சாதியார் தங்கள் தங்களுக்கென்று இப்படியான சபைகளைத் தனித்தனி வைத்து நடத்தும்போது நாங்களும் ஒரு சபையை வைத்து நடத்தவொண்ணுதா? சிங்களர்தான் முழு அதிகாரத்தையும் வைத்துக்கொண்டார்களென்று பலர் அபிப்பிராயப்படுகின்றார்கள். சனத்திரட்கூடிய தொகை கொண்ட சாதியாரிடத்திற்றுனே அதிகாரம் இருத்தல் வேண்டும். இதுதான் ஏனைய நாடுகளிலும் நடப்பதாகும். ஆனதால் தொகையிற்குறைந்த வகுப்பினர் இப்பொழுது மந்திரிசபையார் செய்யினுகளும் பிரேரணைகளை எதிர்ப்பது முறையல்ல."

அவசாவிலைப் பகுதிப் பிரதிநிதியாகிய மிஸ்ரர் D. P. R. குணவர்த்தன பேசியவை:-

"இங்குள்ள தொகையிற் குறைந்த சாதியார் தங்கள் தங்களுக்குரிய பிரதிநிதித்துவம் பெறதா சென்ற கொள்கையுடையவர்களாக விருக்கிறார்கள்; இந்த விஷயத்திலே சிங்களமக்களாகிய நாங்கள் சிறிது உதாரகுணமுடையவர்களாக நடந்துகொண்டால் அத்தொகையிற் குறைந்த சாதியினரெல்லோரும் எங்களோடு ஒத்துழைப்பார்கள் என்பது நிச்சயம். சிங்கள மகாசனசபை இனவகளுக்கெல்லாம் மாருன நிழ்நோக்கமுடையதாக விருக்கின்றது. அந்தச் சபைதான் சிங்களமக்களுக்கும் ஏனைய வகுப்பினருக்குமிடையே பெரும் பிரிவையுந் துவேஷத்தையும் ஆக்கிவிட்டது......"

[என்றிப்படிப் பேசும்போது மிஸ்ரர் குணவர்த்தனவுக்கும் மிஸ்ரர் S. W. R. D. பண்டாரநாயக்காவுக்குமிடையில் வாக்குவாதம்நேர, சபைத் தலைவர்கள் அவர்களை அடக்க, பண்டாரநாயக்கா சபையை விட்டு வெளியே போய்விட்டார்.]

பின்னரும் குணவர்த்தன பேசியது:"இப்பொழுதும் இந்தத்தலஆட்சி முறையில் தமிழர்களுக்கு இன்னுஞ் சில பிரதிநிதித்துவத்தை நாங்கள் கொடுத்தல்வேண்டும். தமிழ்ப் பிரதிநிதிகளை எங்களுடன் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும். அப்படிச் சேர்த்துக்கொண்டு எங்களுடன் மாறுபட்டு நிற்கும் பிருத்தானிய அதிகாரிகளுடன் நியாயம் பேசவேண்டும்."

—

### தான வரவு

சென்ற பங்குனி மாசம் ௨௨ தோலி யோகமான மேலைப் புலோலி திரு. வே. தா. சேந்திவேற்பிள்ளையவர்களின் அபரக்கிரியையில் அவருடைய தமையனுர் புதல்வராகிய திரு. வே. தா. சிவகுருநாதவவர்கள் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக்குத் தானமாக வரித்தனுப்பிய ரூபா 2 பெற்றும்.

நன்றிகூரி
யா. சை. ப. சபை

# அளவெட்டியில் திருட்டு

## 260 ரூபா பெறுமதியான பொருட்களைத் திருடி வைத்திருந்த எதிரி

## கோட்டில் 18 மாசச் சிறைத்தண்டனையும் 3 வருஷக் காவலும்

தெல்லிப்பழை கிழக்கில் வசிக்கும் கோவிய வகுப்பைச் சேர்ந்த பூதன் வல்லிபுரம் என்பவன் அளவெட்டியில் வசிக்கும் மாணிக்கம் கைம்பெண் பெரியபிள்ளை என்பவளுடைய வீட்டினுள்ளே புகுந்து 260 ரூபா பெறுமதியான சீலைகளையும் பித்தளைச் சாமான்களையும் களவாடினதாயும், இப்படிக் களவாடிய பொருட்களை மேற்கூறிய எதிரி தனது வீட்டில் வைத்திருந்தாயும் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கு இன்று டிஸ்திறிக் நீதிபதி திரு. சி. குமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது. முடிக்குரிய அத்வக்காத் திரு. எஸ். கனகசபை வழக்காளிசார்பாகவும் வழக்கறிஞர் திரு. சி. இராசரத்தினம் எதிரியின் சார்பாகவும் வாதித்தனர்.

அளவெட்டியில் உபாத்தியாயராகவிருக்கும் சிவலோகம் சின்னத்துரை கூறியவற்றின் சாராம்சமாவது:-

1938-ம் ஆண்டு மே மாதம் 10-ந் திகதி நானும் எனது மனைவியார் தங்கரத்தினமும் வீட்டை மாமியாராகிய பெரியபிள்ளை என்பவளுடைய பொறுப்பில் விட்டுச் சென்றேம். அன்று யாரோ வீடு புகுந்து திருடி விட்டதாக அறிந்ததுமல்லாமல், அன்றிரவு எனது மாமியார் அடுத்த வீட்டில் நித்திரை செய்ததாயுமறிந்தேன். இக் களவைப்பற்றிப் பொலிசாருக்கு அறிவித்தால் அவர்கள் வந்துபோக நேருமே, அப்படியாயின், அது பெரும் வெட்கக் கேடான காரியமென நினைத்து இக் களவைப்பற்றிப் பொலிசாருக்கு அறிவியாது விட்டேன். 12-ந் திகதி நான் தீர்க்க ஆலோசித்தபின்னர்க் களவாடப் பட்ட பொருட்களின் விபரங்களையும் பொலிசாருக்குக் கொடுத்து ஒரு வாய்முறைப்பாட்டையும் கூறினேன். எனது வாய்முறைப்பாட்டில் இவ்வெதிரிமீது ஐயுறவு கொள்வதாகக் கூறியிருந்தேன் நான் அப்படிக் கூறினமையாற் பொலிசார் என்னுடன் எதிரியினுடைய வீட்டைச் சோதித்தனர். எதிரியினுடைய வீட்டைச் சோதித்த போது ஒரு பெட்டிக்குட் சில துணிகளைக் கண்டெடுத்தனர். அவைகளை நான் என்னுடையவை என்று காட்டிக் கொடுத்தேன்.

இவ்வெதிரி மாவிட்டபுரத்தில் வசிக்கும் பொன்னுச்சாமி என்னும் ஒருவருக்குப் பெறுமதிச் சேலை யொன்றை விற்றதாக வைரமுத்து என்பவர் எனக்கு அறிவித்தார். நான் உடனே இவ்வறிவித்தலைப் பொலிசாருக்குச் சொன்னேன். பொலிசார் பொன்னுச்சாமியினுடைய வீட்டிற்குச் சென்று அவருடைய மனைவியாரிடமிருந்து அச் சேலையை வேண்டி வந்தனர். பொலிசாருக்கு அச்சேலையும் என்னுடையதெனக் குறிப்பிட்டேன். களவு போன பொருட்களில் அகப்படாத சில சாமான்களும் இருக்கின்றன.

மாணிக்கம் கைம் பெண் பெரியபிள்ளை கூறியவற்றின் சாராம்சமாவது:-

சின்னத்துரை எனது மகள் தங்கரத்தினத்தை விவாகஞ் செய்தவர். எனது மகள் தங்கரத்தினம் எனது வீட்டிலிருந்து கால் மைலுக்கப்பாலுள்ள ஒரு வீட்டில் வசிக்கிறுள். இச் சம்பவம் நடப்பதற்கு முன்னர் அவள் பிள்ளையைப் பெறுவதற்காக என்னுடைய வீட்டிற்கு வந்திருந்தாள். அவள் பிள்ளைப் பெறுவதற்கு வந்தபோது, தனது துணிகளையும் கொண்டுவந்திருந்தாள்.

இச் சம்பவத்தன்று இரவு நான் எனது வீட்டைப் பூட்டிக் கொண்டு என் வீட்டுக்கு அயலேயுள்ள நாகமுத்துவின் வீட்டிற்குச் சென்று நித்திரை செய்தேன். மறுநாட்காலை நான் எனது வீட்டிற் போய்ப் பார்த்த போது கதவு திறந்திருக்கவும் சில சாமான்கள் காணமற் போகவும் கண்டு எனது மகளுக்குச் சொல்லி அனுப்பினேன். கள்வன் சுவருக்கும் கூரைக்கும் இடையேயுள்ள வெளியால் வீட்டிற்குட் சென்றிருக்கக் கூடும். உள்ளே நின்று பூட்டின் நாக்கை அமர்த்திக் கதவைத் திறக்க முடியும். வெளியில் நின்று கதவுக்கு வேறு திறப்புப் போட்டு பூட்டைத் திறக்க முடியாது. அன்று அவ்வீட்டில் யாரும் நித்திரைசெய்யவில்லை

வேறு சில சாட்சிகளையும் விசாரணை செய்த பின்னர், எதிரியாகிய பூதன் வல்லிபுரம் கூறியவற்றின் சாராம்சமாவது.

நான் வீடுடைத்துக் களவெடுக்கவுமில்லை; களவெடுத்த சாமான்களை வைத்திருக்கவுமில்லை. இங்கே கோட்டிற்காணப்படும் துணிகளெல்லாம் என் மனைவியுடையவை, பித்தளைப் பாத்திரங்களெல்லாம் என்னுடைய சகோதரியின் மகளுடையவை. நான் இப்போது இளைப்பாறியிருக்கும் விதானையின் சொந்தக்காரியின் ஒரு பெண்ணைக் கடத்திச் சென்று எனது மனைவியாக வைத்திருக்கிறேன். இவள் வேளாள வகுப்பைச் சேர்ந்தவள். நான் கோவிய வகுப்பைச் சேர்ந்தவன். வேளாள வகுப்பைச் சேர்ந்த இந்தப் பெண்ணை மனைவியாக நான் வைத்திருப்பதால் அவ்வூரிலுள்ள வேளாளர்கள் என்மீது பகைமை கொண்டிருக்கிறார்கள். நான் எனது மனைவிக்கு இந்தியாவிலிருந்து சேலைகளை வரவழைத்துக் கொடுத்திருக்கிறேன். அவற்றுள் ஒன்று எனது மனைவியார் பாவித்தபின்னர்க்கிழிந்து போய்விட்டது. மற்றொன்று இங்கே கோட்டில் இருக்கிறது. வரவழைத்த சேலைகளின் நிசிறறுகளை நான் கோட்டாருக்குச் சமர்ப்பிக்கிறேன்.

எதிரி வெளிநாடாகிய மலாய் நாட்டில் நாலு குற்றச்சாட்டுகளில் அகப்பட்டதாயும் தண்டனை அனுபவித்ததாயும் பின்பு நாட்டிலிருந்து தன்னை வெளியேற்றியதாயும் இவ்வூரில் தான் மூன்று குற்றச்சாட்டுகளில் அகப்பட்டுத் தண்டனை அனுபவித்ததாயுங் கூறினன்.

நீதிபதி எதிரிமீது சாட்டப்பட்ட குற்றங்கட்கு எதிரிக்குப் 18 மாதச் சிறைத் தண்டனை விதித்தது மல்லாமல், 3 வருஷப் பொலிஸ்பாதுகாப்பிலு மிருக்க வேண்டுமென்பதாகவும் கூறினர்.

௧.—தி.

## தற்கொலையா அல்லது கொலையா?

—

### ஆனைக்கோட்டையில் நெடுந்திவு வாசியின் பிரேதம்

—

ஆனைக்கோட்டை எருக்கலம்பிட்டிச் சுடலைக்குப் பக்கத்தேயுள்ள ஒரு மடத்தில் இன்று பிற்பகல் (12 5-39) நெடுந்தீவைச் சேர்ந்த சுதிரவேலு கந்தையா தூக்கி இறந்து கிடக்கக் காணப்பட்டார். இசசம்பவம் பொலிசாருக்கு அறிவிக்கப் பட்டது. இறந்தவன் தற்கொலை செய்து இறந்தானே அல்லவோவென்று ஊரவர்களுக்கிடையே ஓர் ஐயுறவு பரவி நடைபெறுகிறது.

௧. தி

—

## நியாயமில்லாமல் வளவுக்குள் நின்றவன்

—

### நல்லூர்வாசி விடுதலை செய்யப்பட்டான்

—

10-5-39

நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவிலடியில் வசிக்கும் சண்முகநாதனுடைய வளவுக்குள் அச்சவேலியில் வசிக்கும் சுந்தன் மாணிக்கன் என்பவன் நியாயங்காட்ட முடியாது நின்றதாகக் குற்றஞ் சாட்டிய வழக்கு இன்று யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நீதிபதி திரு. சி. குமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு, விசாரணை நடுவில் நீதிபதி எதிரியைக் குற்றவாளியல்ல வெனக் கூறி விடுதலை செய்தார்.

௧. தி.

—

## அவரால்தான் முடியும்

—

இன்று இந்தியாவில் காந்திய கோஷ்டியினரைத் தவிர வேறு யாரும் தலைமை வகிக்க முடியாது. மகாத்மா ஒருவரால் தான் சுதந்திரம் பெற முடியும். இந்தியாவிலிருந்து அனுப்பப்படும் எச்சரிக்கைகளைக் கண்டு இங்கிலாந்தில் ஒரு நாய் கூடக் கலைக்காது. ஆனல், காந்திஜீ விரலை அசைத்தால் பிரிட்டன் திமிர்த்துப்பார்க்கும்.

—ஸ்ரீ. என். சத்தியமூர்த்தி.

# சர்வாதிகாரிகளுக்குப் பணியோம்

## பிரிட்டனின் உறுதிபற்றி 8000 ஸ்திரீகள் முன் பிரதம மந்திரியின் சொற்பொழிவு

—:o:—

## "டான்ஸிக் தாக்கப்படில் பிரிட்டன் கலந்து கொள்ளும்; மகாயுத்தம் ஏற்படுவது நிச்சயம்"

### மிஸ்றர் சேம்பர்லேன் சொற்பொழிவு

லண்டன் மே 11

பிரதம மந்திரி மிஸ்றர். சேம்பர்லேன் இன்றுமாலை ஆல்பேர்ட் மண்டபத்தில் கோன்ஸர்வேற்றிவ் கட்சியைச் சேர்ந்த 8000 ஸ்திரீகளுக்கு முன் பேசியதாவது:—

ஐரோப்பாவில் ஒரேயோரு யுத்த அபாயம் மட்டுந்தான் இருக்கிறது. பிரிட்டனும் பிரான்சும் உண்மையிலேயே சிரத்தையுடன் வேலை செய்யவில்லையென்றும், தங்கள் வாக்குறுதிகளை அவைகள் நிறைவேற்றுமென்று நம்பமுடியாதென்றும், தப்பபிப்பிராயம் ஏற்படவேதே இந்த அபாயத்தை உண்டுபண்ணுவதாகவிருக்கிறது.

வெளிநாடுகளில் இருப்பவர்கள் இவ்வித தப்பபிப்பிராயத்தால் ஏமாற்றமடைவதைவிட அபாயகரமான பெரிய தவறு வேறொன்றும் கிடையாது.

டான்ஸிக்கைப்பற்றி அவர் குறிப்பிட்டதாவது:—போலந்தின் சுதந்திரத்திற்கு அபாயம் உண்டுபண்ணத்தக்க முறையிற் பலாத்காரத்தின்மூலமாக டான்ஸிகின் நிலைமையை மாற்ற ஒரு முயற்சி செய்யப்படுமாயின், இதனால் பிரிட்டன் கலந்து கொள்ளும் ஒரு பொது யுத்தம் ஏற்படுவது நிச்சயம்.

### சுதந்திரத்தைப் பலி கொடுக்க மாட்டோம்

சர்வதேச நிலைமையைப் பற்றி மேலும் அவர் குறிப்பிட்டதாவது:-

பிருத்தானிய ஜனங்கள் தங்கள் பலத்தில் நம்பிக்கை வைத்தும், சமாதானத்தைக் காப்பாற்ற மனிதர்கள் செய்யக்கூடியதையெல்லாம் தங்கள் அரசாங்கத்தார் செய்து வந்திருக்கின்றனர், இன்னும் செய்து வருகின்றனர் என்ற களங்கமற்ற மனச்சாட்சியுடனும் தங்கள் நோக்கத்திற் காலப்பிரீதியில்லையென்பதையும் அது நியாயமென்பதையும் நன்கு உணர்ந்தவர்களாயும் ஸ்திரமான உறுதியான தீர்மானத்துடனிருக்கிறார்கள்.

### பிருத்தானிய சுதந்திரமும் நல்ல பெயரும் பலி கொடுக்கப்படமாட்டா

மற்றவர்களின் அபிப்பிராயங்களுக்குச் செவிசாய்க்கப் பிரிட்டன் எப்பொழுதும் தயாராகவிருக்கிறது. ஆனால், சர்வாதிகாரமுறையில் கொடுக்கப்படும் ஆலோசனைகளுக்கு இணங்குவதில்லையென்று தீர்மானமாகவிருக்கிறார்கள்.

எங்களுடைய சுதந்திரத்தையும் நல்ல பெயரையும் பலி கொடுக்காமல் யுத்தத்தைத் தவிர்க்க முடியாதெனக் காங்கள் பூரணமாகத் திருப்தியடைதாலன்றி மற்றப்படியொன்றும் எங்களை யுத்தத்திற்குத் தூண்ட முடியாது.

மேலும், அவர் தொடர்ந்து பேசியதாவது:—

மற்றத்தேசத்தவர்களின் அலுவல்களில் தலையிடுவது பிரிட்டிஷ் கொள்கையாக இருந்ததே கிடையாது. ஜெர்மனி ஜெர்மன் அல்லாத நாடுகளின் சுதந்திரத்தைப் பாதிக்காமல் ஜெர்மானியர்களுடைய கலவிரீனர்களை விருத்திசெய்ய ஈடுபடும்வரையும் பிரிட்டன் அவர்களைப்பற்றி அக்கறை கொள்ளப்போவதில்லை.

### ஜேர்மனிக்கு இடைஞ்சல் பண்ணும் எண்ணமில்லை

ஜெர்மனிக்கு இடைஞ்சல் செய்வதோ அல்லது மத்திய தென்கிழக்கு ஐரோப்பாவில் தனது வர்த்தகத்தை இயல்பாகவும் நியாயமாகவும் ஜெர்மனி விஸ்தரிப்பதற்கு முட்டுக்கட்டையிடுவதோ அல்லது ஒரு யுத்தம் செய்யும் நோக்கத்துடன்—ஜெர்மனிக்குவிரோதமாக ஒரு கோஷ்டியை உண்டு பண்ணுவதோ பிரிட்டனின் எண்ணமாக இருந்ததேயில்லை.

ஆங்கிலோ—ஜெர்மன் கடற்படை ஒப்பந்தம் பற்றி மிஸ்றர் சேம்பர்லேன் கூறியதாவது:—

எங்களைப் பொறுத்தபட்டிலும் இந்த உடன்படிக்கையின் அந்திவாரம் இன்னும் விட்டுப்போகவில்லை. ஆனால், இனி ஒருபோதும் ஒருவரொருவரை எதிர்த்துச் சண்டைசெய்வதில்லை என இருதேச சனங்களுக்குள்ளும் இருக்கும் விருப்பத்தை ஆங்கிலோ—ஜெர்மன் கடற்படை ஒப்பந்தம் காட்டுவதாகக் கருதப்படலாம்.

இந்த ஆசை இருதேச மக்களிடமும் எப்பொழுதும் போல உறுதியானதாக இருக்குமென்று நான் நம்புகிறேன். இருதேசங்களுள்ளும் யுத்த விவகாரமே ஏற்படக்கூடாதவாறு, அவர்களுடைய உறவுகளை அவர்களுடைய அரசாங்கங்கள் சரிபண்ணுவார்கள் என்று ஜனங்கள் எதிர்பார்க்கிறார்கள் என்று நான் உறுதியாகக் கருதுகிறேன்.

ஜெர்மனிக்கும் பிரிட்டனுக்குமிடையில ஆயுதப்போட்டியைத்தவிர்க்கலாமென்றும், கடற்படை விவகாரங்கள் விஷயமாகப் பேச்சு வார்த்தைகள் நடத்தத் தான் தயாராக விருப்பதாகவும், ஹிட்லர் றீச்ஸ்டார் பிரசங்கத்தில கூறினார்.

### நம்பிக்கை மீண்டும் ஏற்பட வேண்டும்

இதுவிஷயத்தில் ஆயுத ஸ்வீகாரத்திலாவது அல்லது வர்த்தகத்திலாவது ஜெர்மனியுடன் போட்டியிடுவது எங்கள் விருப்பமல்ல. எங்களுடைய பரஸ்பரவர்த்தகத்தை விருத்தி செய்யவோ பேச்சுவார்த்தைகள் நடத்த நாங்கள் தயாராக விருக்கிறோம். ஆனால், ஒரு நிபந்தனையுண்டு. இவ்வளவு தூரம் ஆடி அசைந்து போயிருக்கும் நம்பிக்கையை மீண்டும் உண்டுபண்ண ஜெர்மனி திட்டமான அறிகுறிகளைக் காட்டிக்கொள்ள வேண்டும்.

நாடுகளின் சுதந்திரம் ஒவ்வொன்றாக அளிக்கப்படுவதைச் சும்மா பார்த்துக்கொண்டிருக்க நாங்கள் தயாரில்லை என்று நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். ஏனெனில் மற்ற நாடுகளின் சுதந்திரத்தைப்பறிக்க மீண்டும் முயற்சி செய்யப்படவில்லை என்றும் போலந்து ருமேனியா கிரீஸ் ஆகிய நாடுகளுக்கு நாம் உறுதிப்பாடு கொடுத்திருக்கிறோமென்றும், தேசங்கள் திருப்தியடையாவிடில் ஐரோப்பாவில் அமைதியும் பாதுகாப்பும் ஏற்படாது.

ஐரோப்பிய நிலைமையை அமைதியாகஸ் ஸ்திரப்படுத்துவதற்காக மற்ற நாடுகளுடன் சிறப்பாக ருஷியாவுடனும் துருக்கியுடனும் நாங்கள் பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகிறோம். இந்தப் பேச்சுவார்த்தைகள் சீக்கிரம் வெற்றிகரமாக முடிவடையவேண்டுமென்பதும், இவ்விதமாகச் சமாதானம் மீண்டும் நிலைநாட்டப்பட வேண்டுமென்பதும் அரசாங்கத்தின் நம்பிக்கை.

### பலாத்காரத்தை எதிர்ப்போம்

இன்று ஐரோப்பாவில் டான்ஸிக்கே ஆபத்துக்கு அஸ்பதமாக இருக்கிறதென்று பலர் கருதுகின்றனர். நாம் போலந்துக்குத் தெளிவான உத்தரவாதமளித்திருக்கிறோம். போலந்துக்கும் ஜெர்மனிக்குமிடையில் ஏற்பட்டுள்ள தகராறுகள் பேச்சுவார்த்தைகள் மூலமாகச் சமாதானமாகத் தீர்க்கப்படவேண்டுமென்பது நமது விருப்பமென்றாலும், போலந்தின் சுதந்திரத்திற்கு ஆபத்து ஏற்படும் முறையிற் பலாத்காரமாக டான்ஸிக் நிலைமையை மாற்ற முயற்சி செய்யப்படுமாயின, இதனால் நிச்சயம் ஒரு பொது யுத்தமேற்படும். இந்த யுத்தத்தில் பிரிட்டன் கலந்துகொள்ளும்.

### அபாயகரமான தப்பபிப்பிராயம்

கட்டாய இராணுவப் பயிற்சி பற்றி மிஸ்றர் சேம்பர்லேன் கூறியதாவது:-

பிரிட்டனின் நோக்கங்களைப் பற்றிச் சில ஐரோப்பிய நாடுகளில் தப்பபிப்பிராயமேற்பட்டிருக்கிறது. இந்தச் சந்தேக உணர்ச்சி எவ்வளவு பலமாக இருக்கிறதென்றால், ஒரு சமாதான முன்னணியை உண்டுபண்ணுவதற்கான முயற்சி வெற்றி பெறுவதற்கு இடைஞ்சல் ஏற்படும்போல் தோன்றுகிறது. இந்தத் தப்பபிப்பிராயத்தினால் ஐரோப்பாவில் யுத்தமேற்படுமாயின், அது பயங்கரமானதாகவிருக்கும்.

கட்டாய இராணுவப் பயிற்சி விஷயத்தில் தொழிற்கட்சியாரின் மனோபாவனை துரதிர்ஷ்டவசமானதே.

இது விஷயத்தில் அக்கட்சிதான் பிரதிநிதித்துவம் செய்யும் ஜனங்களுடைய அபிப்பிராயத்தை வெளியிடவில்லை என்று நான் நிருப்தியடைகிறேன். சர்வதேச நெருக்கடியிலிருந்து நமக்குச் சற்று விவாரனை ஏற்படுமாயின் உலகத்தில் எல்லாத் தேசங்களுக்கும் நன்மையுண்டுபண்ணும் வர்த்தக அபிவிருத்தியும் சுபிட்சமும் ஏற்படுவதற்கு அறிகுறிகள் பல காணப்படுகின்றன.

நம்பிக்கையுண்டுபண்ணும் சக்தி நம்மிடம்மட்டும் இல்லை. ஆனால், நான் இப்பொழுது இருக்கும் பதவியில் இருக்குமட்டும் இந்த நம்பிக்கையையுண்டுபண்ண என்னாலான முயற்சிசெய்வேன்.

---

## 'அல்ஸியா' சேதம் ஐம்பது லக்ஷம் ரூபாய்

### கரையில் ஒதுங்கப்பட்ட உயிர்காக்கும் படகுகள்

டேனிஷ் மோட்டோர்க் கப்பலான "அல்ஸியா"வில் ஏற்பட்ட விபத்துக் காரணமாக 50 லட்சம் ரூபாய்வரை கஷ்டமேற்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

"அல்ஸியா" இன்னும் எரிந்துகொண்டே இருக்கிறது. கப்பலின் கப்டனும் அதைச் சேர்ந்த சிப்பந்திகளும் கொழும்பில் இருக்கின்றனர்.

கரையில் உயிர்காக்கும் படகுகள்

காலி மே 12—

அல்ஸியாவிற்குச் சொந்தமான நான்கு உயிர்காக்கும் படகுகள் இன்று கரையை அடைந்தன. வள்ளங்களிற் சில சிறு பெட்டிகளும் தகரத்திலடைக்கப்பட்ட உணவுப் பொருட்களும் விஸ்கோத்தும் காணப்பட்டன.

அரசாங்க ஏஜெண்ட் அல்ஸியாவின் ஸ்தல ஏஜெண்டுகளைச் சேர்ந்த திரு சீவ்ஸ் உதவிப் பொலிஸ் சூப்ரண்டுடன் படகுகளைப் பார்வையிட்டு அங்கு காணப்பட்ட பொருட்களைக் குறித்தார். படகுகள் காலிக்குக் கொண்டுவரப்படும். இவற்றைப் போலிஸார் காவல் செய்து வருகின்றனர்.

சேற்று இங்கு வந்த டேனிஸ் கொன்ஸலும் அவரது மனைவியும் காப்டனுடன கொழும்புக்குப் புறப்பட்டனர்.

தகரப்பெட்டிகளில் அடைக்கப்பட்ட பழப்பெட்டிகள் அநேகம் கரை சேர்ந்தன. இவற்றைப்பெற்ற ஜனங்கள் அவைகளைத் திறந்து சாப்பிட்டனர்.

---

### கிணற்றுள்வீழ்ந்திறந்தமை

அராலியிலுள்ள மலாய்க்கட்டுப் பென்சனரும், கிராமக்கோட்டுத் தலைவருமாகிய திரு. S. வேலுப்பிள்ளையென்பவர் இந்த மாசம் 6-ம் திகதி சனிக்கிழமையிரவு சாத்திராப்பிரகாரம் கிணற்றினுள் விழ்ந்து இறந்தாரெனக் கேள்வியுற்றுப் பெரிதும் துயருறலானோம்.

---

## தீச்சுவாலைக்கிடையில் தென்றல்

### பார்ஸி பிரமுகர் காணிக்கை

"காந்திஜீயைச் சுற்றி பல துறைகளில் பிரமாதமான நெருப்புப்பற்றி எரிகின்றது. ஆயினும் அந்த ஜுவாலைகள் ஒருபுற மிருக்க, நன்மை பயக்கவல்ல அம்சங்களும் இல்லாமற் போகவில்லை. அவரும் அவைகளைப் பார்த்துத் தான் அடிக்கடி பின்வருமாறு பாடுவது வழக்கம்:

'தியாக அக்னியில் துள்ளிக்குதித்துக் குளிப்பவனே பாக்கியவான். எட்டி நின்று அந்த அக்னியை வேடிக்கை பார்ப்பவர்கள் ஜுவாலை உக்கிரத்தில் சிக்கித் தீய்ந்துபோவார்கள்.'

"பம்பாயில் மதுவிலக்குச் சட்டம் அமுலுக்கு வரப்போவதன் காரணமாகக் கிளம்பியிருக்கும் எதிர்ப்புப் புயலைக் குறித்து நான் நினைத்துப் பார்க்கும் போது மேற்சொன்ன எண்ணங்கள் என் மனத்தில் சஞ்சரிக்கத்தொடங்கின" என்று ஸ்ரீ மகாதேவ தேசாய் ஹரிஜன் பத்திரிகையில் பின்வருமாறு எழுதுகிறார்:

பம்பாய் பார்ஸி ஜாதியினர்—அந்த ஜாதியில் சகலருமல்ல, சிலர்தான்—மதுவிலக்குத் திட்டத்திற்கு விரோதமாக இயக்கம் ஆரம்பித்திருக்கிறார்கள். கண்டனக் கூட்டங்களும், ஊர்வலங்களும் நடைபெற்று வருகின்றன. காந்திஜீக்கும் கத்தை கத்தையாகக் கண்டனக் கடிதங்கள் வந்தவாறு இருக்கின்றன.

நண்பர் கடிதம்

கடந்த வாரம் ஒரு நண்பரிடமிருந்து ஓர் கடிதம் வந்தது. அந்தக் கடிதம் மேற் சொன்ன கண்டனக் கடிதங்களைப் போன்றதல்ல. சென்ற இருபது ஆண்டுகளாக நம்முடன் கூட இருந்து போராடிய ஒரு பார்ஸி நண்பர்,—அவர் இப்பொழுது தேக அசௌக்கியத்தினால் தொண்டாற்றச் சக்தியில்லாமலிருக்கிறார்—மிகவும் பட்சமாகக்கடிதம் எழுதியிருக்கிறார். அந்தப் பெரியார் தற்சமயம் கோய்வாய்ப்பட்டிராமலிருந்தால், 'டாக்டர் கில்டருக்குப் பக்கபலமாக இருந்து மதுவிலக்கு எதிர்ப்பு இயக்கத்துடன் போராடுவதுடன், பார்ஸிகளின் மனத்தை மாற்றவும் பிரயத்தனம் செய்வார். அவருடைய கடிதத்தின் சாராம்சம் வருமாறு:

பம்பாயில் இன்று நடைபெறும் சம்பவங்களைப் பார்த்து என் மனம்படும் ஆயாசத்தைத் தெரிவித்துக்கொள்ள நான் தங்களுக்கு இக்கடிதம் எழுதுகிறேன. மதுவிலக்குத் திட்டத்திற்கு விரோதமாக என் ஜாதியினர் சிலர் புயல் காற்றுப் போன்ற எதிர்ப்பு இயக்கத்தைக் கிளப்பியிருக்கின்றனர். மதுவிலக்குத் திட்டத்தினால் என் ஜாதியினர் உட்பட எல்லோருக்கும் நன்மை ஏற்படுமென்பதில் சந்தேகமில்லை. ஆயினும் என் சமூகத்தினர் கண்டன இயக்கத்தை ஆரம்பித்திருப்பதானது மனவருத்தம் அளிக்கிறது.

தொடரும்

---

## றப்பர்க் கோட்டா

### பலத்த அபிப்பிராய பேதங்கள்

லண்டன் மே 11—

அடுத்த வியாழக்கிழமை கூடவிருக்கும் சர்வதேச றப்பர்க்கட்டுப்பாட்டுக் கொமிற்றிக் கூட்டத்தின் நிழல்கள் மார்க்கெட்டுகளில் விழுந்திருப்பது போன்று காணப்படுகின்றது.

கொமிற்றி செய்யக்கூடிய சிறந்த நடவடிக்கை எது என்பது பற்றிப் பலமான அபிப்பிராய பேதங்கள் இருந்து வருகின்றன.

கிரமமான விலை விற்கும்வரையில் 3வது காலவருடக் கோட்டா இருக்கபடியே இருக்கவேண்டுமென்று கருதப்படுகின்றது.

இவ்வட்டாரங்களில் 5 சத விகிதம் கோட்டாவை அதிகப்படுத்தினால் அது ஒன்றும் விலையைக்குறைத்துவிடாது என்று கருதப்படுகின்றது.

சிலர் 10 சத விகிதம் கோட்டா உயர்த்தப்பட்டால், அதனால் ஒன்றும் விலை விழுந்துவிடாது. அவசரத் தேவைக்கு வேண்டிய சரக்கு இருக்குமென்று கருதுகின்றனர்.

---

## சுதுமலை புவனேஸ்வரி அம்மன்கோவில்

### இம்முறை திருவிழா உற்சவம் ஆனி மாதத்தில் நடைபெறும்

—0—

மேற்படி புவனேஸ்வரி ஆலயத்தின் முன்னுள்ள குளம் வயல் முதலியவற்றில் அண்மையிற் பெய்த பெருமழையால் ஏற்பட்ட வெள்ளம் இன்னும் நிற்பதால் அவ்வாலயத்தில் வழக்கமாக நடைபெறும் திருவிழாக்கள் வைகாசிமாதத்தில் நடைபெறுமல் இம்முறை ஆனி மாதத்தில் நடைபெறுமென்று அறிகின்றோம்.

---

## இந்துசாதனப் பொன்விழா நிதி

| | ரூ. | ச |
|---|---|---|
| 11-5-39ல் வெளியான இந்துசாதன இதழின்படி | 673 | 60 |
| திரு. T. சிவப்பிரகாசம்பிள்ளை Kensington Gardens பம்பலப்பிட்டி | 5 | 00 |
| திரு. C. K. இரத்தினம் கொம்பனித் தெரு | 5 | 00 |
| திரு. K. கந்தையா Raymomd Road நுகேகொடை | 10 | 00 |
| திரு. K. சபாநாதன் Boswell Place வெள்ளவத்தை | 3 | 00 |
| திரு. M. அருளம்பலம் Temple Rd. கீர்கொழும்பு | 3 | 00 |
| திரு. Spencer இராசரத்தினம் குருநாக்கல் | 10 | 00 |
| திரு. V. S. K. சுப்பிரமணியம் திருகோணமலை | 5 | 00 |
| திரு. S. S. மணியம் திருகோணமலை | 2 | 00 |
| திரு. A. சின்னத்துரை Div No 8 திருகோணமலை | 1 | 00 |
| Dr. K. நமசிவாயம் Div No. 8 ,, | 2 | 00 |
| திரு. S. S. சரவணமுத்து North Coast Rd. ,, | 2 | 00 |
| திரு. S. K. ஆழவாப்பிள்ளை Shroff கச்சேரி ,, | 2 | 00 |
| திரு. A. நவரத்தினம் திருமகள்வாசம் ,, | 2 | 00 |
| ப்ரம்மஸ்ரீ S. K. குமாரசுவாமி ஐயர் H B Tamil School ,, | 2 | 00 |
| ,, S. பொன்னுச்சாமிக்குருக்கள் சுதுமலை | 5 | 00 |
| திரு. N. சுவாமிநாதபிள்ளை Div No 5 திருகோணமலை | 10 | 00 |
| ,, C. இராசநாயக முதலியார் கொழும்பு 4-ம் பாகம் | 5 | 00 |
| ,, N. சின்னப்பாபிள்ளை பெல்மதுளை | 2 | 00 |
| ,, K. இளையதம்பி குவாலாலம்பூர் | 2 | 00 |
| ஆகக்கூடிய வரவு | 751 | 60 |

மேலே காட்டப்பெற்ற அபிமானிகட்கு நன்றி கூறி ஏனைய அபிமானிகளையும் இந்நிதியின் பொருட்டு இயன்ற பொருள் உதவும் வண்ணம் விநயத்துடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

ச. அருடலிங்கம், மனேஜர்.

ம. வே. திருஞானசம்பந்தன், பத்திராசிரியர்.

# சிவபூசை

—0—

(1-ம் பக்கத் தொடர்)

சைவசமயி சிவதீக்ஷை பெறவேண்டும் என்பது

சமயப்பிரவேசஞ் செய்யாதவன் ஒருபோதும் அச்சமயத்துக் குரிய வனாகான். சைவசமயப் பிரவேசமே சமயதீக்ஷையாகும். இதனைப் பெற்றவன்தான் "நான் ஒரு சைவ சமயி" என்று சொல்ல அதிகார முடையவனாவன். விபூதிப் பூச்சு மாத்திரம் போதியதல்ல. சமய தீக்ஷை பெற்றவர்கள் சரியாமார்க்கத்தில் நின்று சிவதொண்டு செய்யற்பாலர். இவர்கள் செய்யும் நற்செயல்களே சிவபுண்ணியங்களாகும். விதித்தன செய்தல் மாத்திரமேயன்றி, விலக்கியன ஒழிதலும், புண்ணியமாம். அவைதாம்:— வறியோர்க்கீதல், சத்திரம் முதலியன கட்டுவித்தல், வித்தியாசாலை தாபித்தல், கல்வி கற்பித்தல், கன்னிகாதானஞ் செய்தல், தண்ணீர்ப் பந்தல் வைத்தல், பசுக்காத்தல், அநாதப் பிண மடக்கல், ஆபத்திற்குதவுதல், கொல்லாமை, கள்ளாமை, அழுக்காறாமை, பொய்யாமை, பிறர்மனை நயவாமை, குருநிந்தை செய்யாமை, சிவநிந்தையைச் சகியாமை என்பன. இவைகளெல்லாம் சுவர்க்காதி போகங்களைக் கொடுத்து, அவற்றின் முடிவிலே அவ்வான்மாக்களைப் பின்னும் பிறவியிற் செலுத்தும்; நித்தியவின்பத்தை ஒருபோதும் கொடுப்பனவாகா. இதுபற்றியே நாயனாரும்,

> "கூற்றினையைப்போற் பாவம்
> குலக்கொடிபோற் புண்ணியங்கள்
> சீத்தார்க் கிரண்டுங் கெருப்பு."
>
> என்றருளினர்.

இனி முத்தியின்பத்தைப் பயக்கும் நேர்வழிதான் யாதென ஆராய்வாம். அஃது இரண்டாவதாகிய விசேஷ தீக்ஷை பெற்றுச் செய்யும் சிவபூஜையேயாகும். மனிதப்பிறவியாலாய பயனைக் கொடுப்பதும் அதுவே.

> "மானிடப்பிறவிதானும்
> வகுத்தது மனவாக்காயத்
> தானிடத்தைந்து மாடுமரன்
> பணிக்காகவன்றோ
> வானிடத்தவரு மண்மேல்
> வந்தரன் றனையர்ச்சிப்பர்
> ஊனெடுத்துழலு மூமரொன்
> றையு முணராரந்தோ."

என்பது சிவஞான சித்தியார் திருவாக்கு.

சிவபூஜை செய்பவர்களே கிரியா மார்க்கத்தை அநுட்டிப்பவராவர். இக்கருத்துப்பற்றியே திருவாதவூரர் புராணத்தில்,

> "கந்தர்வர்க்கமுங் கிளர்மணப்
> புகையுங்
> கவின்கொடிபமும்
> புனிதமஞ்சனமுங்
> கொந்த விழ்ந்தகன்
> மலரு மற்றுளவுங்
> கொண்டு மாயையின்
> குணங்களொன்றிலா
> மைந்து சுத்தி செய்
> தகம் புறமிறைஞ்சி
> யங்கியின் கடன்
> கழித்தருள் வழிநி
> றிந்த நற்பெருங் கிரியை
> யன்புடனே
> வியற்ற வல்லவ
> ரெம்மருகிருப்பார்."

என்று மணிவாசகருக்குச் சிவபெருமானே ஞானாசாரியத் திருக்கோலத்துடன் உபதேசித்தாராகக் கூறப் பட்டுள்ளது. ஆகவே சிவபூஜையானது சிவசாமீப்பிய பதவியைக் குறிக்கோளாகக் கொண்டது எனலாம்.

சிவபூஜையென்பது வாக்கு மனாதீதரான கடவுளை அவர்க்கு விஷயமாம்படி செய்யும் ஒருத்தம வழிபாடாம். இதனை 'உடையவர் பூஜை' எனவும் பெரியோர் வழங்கியிருக்கின்றனர். அது ஆந்தர் யாகம், பகிர்யாகம் என இருதிறப்படும். இதனையே 'அகப்புறமிறைஞ்சி' என மேலே கூறினர். ஆந்தர்யாக மாவது அகத்துச் செய்யும் வழிபாடாம். அஃதாவது சத்ததாதுக்களாலாகியதும் நவத்துவாரங்களை யுடையதுமாகிய சரீரமென்னும் ஆலயத்தில், இருதயமாகிய மண்டபத்தில் சாதனாராகிய பரம் பொருளைச் சர்வாதாரமான கம்பிக்கை, ஆசனமும், அஞ்ஞானமென்னும் நிருமாலிய நீக்கமும், இடைவிடாத பக்தி என்னும் திருமஞ்சனமும், அன்பு என்னும் நிவேதனமும் வைராக்கியம் முதலிய அஷ்டபுஷ்பங்களும் சோதம பாவனை என்னும் தீக்கியமும் கொண்டு வழிபடுதலாம். மனத்தையடக்கிச் செய்ய வேண்டிய இந்த வழிபாடு இலகுவானதல்ல. ஆனால் கிரமமாகச் சாதனை செய்யுமிடத்து சிரமமில்லை, சித்தியைப் பயப்பதாகும். புறத்தே செய்யும் பூசையாவது, ஆசாரியர் முறைப்படி தீக்ஷை செய்து கொடுத்த இஷ்டலிங்கம் முதலிய வற்றிற்குப் பூஜைக்குரிய சாதனங்களுடன் கெற்பிறழாது பஞ்ச அவசரம் செய்யும் வழிபாடாகும். இஷ்டலிங்க பூஜையெனப்படுவது ஆன்மார்த்தமாகச் செய்யும் வழிபாட்டினைக் குறிக்கும். பூஜை செய்யுமதிகாரமில்லாத பிறர் பொருட்டாகத் திருக்கோவில்களிலே சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசிப்பதுவே பரார்த்த பூஜையாகும். இனி, இஷ்டலிங்கமான க்ஷணிகலிங்கமெனவும் சலலிங்கமெனவும் இருவகைப்படும். பிறர் பொருட்டாகத் திருக்கோவில்களிலே பிரதிஷ்டைசெய்து பூசிக்கப்படுவது அசலலிங்கமாம். அது சுயம்புலிங்கம், தெய்விகலிங்கம், ஆரிட லிங்கம் மானுடலிங்கம் என நான்வகைப்படும். இலிங்கம் என்பது குறி-அடையாளம். அகண்டிதமாய் விளங்கும் எம்பெருமானை எமபோலியர் மனத்திலே தியானிப்பதற்குச் சாதகமாகக் கொள்ளுந் திருவடிவமைத்தே சிவலிங்கமெனபோம். அது வியக்தலிங்கம், அவ்வியக்தலிங்கம், வியக்தாவியக்தலிங்கம் என மூவகைப்படும். இவற்றையே, முறையாக சகளலிங்கம், நிஷ்களலிங்கம், சகளநிஷ்களலிங்கம் எனவுங் கூறுவர். மகேசுவரரிடத்திலிருந்து தோன்றிய சந்திரசேகரர் முதலான இருபத்தைந்து விக்கிரகங்களும் வியக்தலிங்கமாகும். இது உருவத் திருமேனி கூறியவாறு. அவ்வியக்தலிங்கமாவது அருவத்திருமேனியாகும். இது சிவன் என்னும் பெயருடையது. ஆவுடையாரும் இலிங்கமுமாக விளங்குவது வியக்தாவ்வியக்தலிங்கமாகும். இது சாதாக்கிய வடிவமெனப்படும் அருவுருவத் திருமேனியாகும். ஸ்தண்டிலலிங்கத்தையும், அதாவது தனை வடிவத்தையும் வியக்தாவ்வியக்த லிங்கமென்று வாதுளாகமங் கூறும். சாதாக்கிய வடிவமோ, சிவசாதாக்கியம், அமூர்த்திசாதாக்கியம், மூர்த்திசாதாக்கியம், கர்த்திருசாதாக்கியம் கர்மசாதாக்கியம் என ஐந்து வகைப்படும். சிவபெருமான் மேலே கூறிய மூவகை இலிங்கபேதங்களுள் சகளத்திருமேனியில் மூர்த்தியாகவும், நிஷ்களத்திருமேனியில் தத்துவமாகவும், சகளநிஷ்களத் திருமேனியில் மூர்த்தியுந் தத்துவமுங் கலந்த பிரபாவமாகவும் விளங்குவர். (வரும்)


யாழ்ப்பாண

**ஐக்கிய வியாபாரச் சங்கம்**

[வரையறுத்தது]

1918—ம் ஆண்டு ஸ்தாபிதமானது

அதிகாரம் பெற்ற மூலநிதி ரூபா—100,000

100 ரூபா விகிதமான 1000 பங்குகள்

சேமநிதி 23237—39

சென்ற 19 வருஷங்களுக்குக் கொடுபட்ட லாபம் ரூபா 800,00-00

வட இலங்கையில் தம்மக்களால் ஒன்றுகூடி நடத்தப்படும் வியாபார நிலையம் இதுவொன்றே. தேசிய முன்னேற்றத்தை நோக்கி உங்களுடைய மிச்சங்களைக் கொண்டு சங்கத்தில் பங்குகளை எடுத்து வியாபாரத்தை மேலோங்கச் செய்வதற்கு முன்வாருங்கள். அதனுடன் கடையிற் சாமான்களை வாங்கி ஆதரியுங்கள். சென்ற வருஷங்களுக்கு நல்ல லாபங் கொடுபட்டன.

(Y 175 24-10-38 to 23-10-39) (இ)


## இலங்கை அரசாங்கசபை

—

### உபாத்தியாயர்கள் வேதனத்தைக் குறைக்கும் விஷயமாக ஆசங்கை

இலங்கை வித்தியா மந்திரி கூட்டத்தினர், வித்தைச் செலவைக் குறைக்க நோக்கங் கொண்டு (1) ஒரு வகுப்பிற்குரிய பிள்ளைகளின் தொகையை இப்பொழுதிருப்பதைக் காட்டிலும் அதிகப் படுத்துதல் (2) பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் தராதரப் பத்திரம் பெற்ற உபாத்தியாயர்களின் வேதனத்தைக் குறைத்து அவர்கள் கொண்டுள்ள லக்கத்தைக் கெடுத்தல் இன்னும் பல அடாத பிரமாணங்களை ஆசிரியர்களுக்கு விரோதமாக நிறைவேற்ற முயலுதல் ஆகிய முயற்சிகளை இந்த அரசாங்கசபை கண்டிக்கின்றதென்னும் பிரேரணையை மத்திய கொழும்புப் பிரதிநிதியாகிய மிஸ்டர் ஏ. இ. குணசேன எடுத்தாள விருக்கின்றாரென அறியக்கிடக்கின்றது.

## வெள்ளம், மலேறியாக் கஷ்ட நிவாரணை அவிழ்ந வற்புறுத்தல்

—0—

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அதன்பின், டக்டர் எ. பீ. ம. சொய்சா முதலிய பலர் பேசினர்.

யாழ்ப்பாண வெள்ளம் சம்பந்தமாகத் திரு. நடேசன் பேசினர்.

யாழ்ப்பாண விவசாயிகளின் புகையிலை அழிந்தது காரணமாக அவர்களுக்குத் துரிதமாக நிவாரண வேலை செய்யும்படி நான் தொழில் மந்திரியைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. பொன்னம்பலம் பேசியதாவது: வடமாகாணத்தின் மேற்கு அர்த்தத்தில் ஜனங்கள் மலேறியாவால் கஷ்டப்படுகின்றனர். மேற்படி இடத்திலுள்ள பங்குக்குக் குரு மனுச் செய்தது கவனிக்கப்படவில்லை. ஆகவே, இது விஷயம் கவனிக்கப் படவேண்டும்.

திரு. டட்லி சேனநாயக பிரேரணையை ஆதரித்துப் பேசுகையில் தமது தொகுதியிலுள்ள கஷ்டங்களைப்பற்றி எடுத்துக் காட்டினர்.

—

## எகிப்து பிரதம மந்திரியுடன் மார்ஷல் பால்வோ பேட்டி

—

### எகிப்துக்கு உறுதி மொழி

கெய்ரோ மே 9

இன்று எகிப்துப் பிரதம மந்திரி மார்ஷல் பால்போவுக்குப் பேட்டியளித்தார்.

இத்தாலி எகிப்திடம் விசேஷ நட்புணர்ச்சி கொண்டிருக்கிற தென்றும் லிபியாவிலுள்ள இத்தாலியப் படைகளால் எகிப்துக்கு எவ்விதத்திலும் ஆபத்து ஏற்படாதென்றும் மார்ஷல் பால்போ அப்பிரதம மந்திரியிடம் உறுதி கூறியதாகத் தெரிகிறது.

—

## கோண்டாவில் கிராம அபிவிருத்திச் சங்கப் பொதுஜன வாசிகசாலை

—

கோண்டாவில் புகைரத ஸ்தானத்துக்கு மேற்கேயுள்ளதும் ஸ்ரீமதி பேரின்பநாயகம் நல்லம்மாவால் இலவசமாகச் சங்கப் பாவிப்புக்கு உதவியதுமான புதிய கட்டடத்தில் பிரமாதி வருஷம் சித்திரை 11-ம் நாள் (24 4 39) திங்கட்கிழமை வாசிகசாலை ஆரம்பிக்கப்பட்டது.

மு. ப. 9. 45 அளவில் உள்ள சுபமுகூர்த்தத்தில் பிள்ளையார் கோவிலிலிருந்து மேளவாத்தியங்களுடன் ஊர்வலமாகக் கொண்டு வந்த சரஸ்வதி படமொன்றை உயர்திரு. சுவாமி மகாதேவா அவர்கள் திறந்து வைத்துப் பூசை செய்தபின் இவ் வாசிகசாலை வருங்காலத்தில் ஓர் நூல்நிலையமாகி இவ்வூரரை நல்வழிப் படுத்த உதவ வேண்டுமென்று பிரார்த்தித்து ஆசீர்வதித்தனர்.

பி. ப. 4 மணி தொடக்கம் மேளவாத்திய சங்கீதங்கள் கிழச் சிற்றுண்டிகளும் வழங்கப்பட்டன. 6 மணியளவில் கொக்குவில் கோண்டாவில் கிராமச்சங்கத் தலைவரும் மேற்படி சங்கத் தற்போதைய தலைவருமான திரு. எஸ். நவரத்தினமவர்களின் தலைமையின்கீழ்ப் பிரசாரக் கூட்டம் தேவாரத்துடன் ஆரம்பமானது.

அப்போது சைவப்பிரசாரகர் திரு. த குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள் வாசிகசாலையைத் திறந்தபோது கிராமத்தவர் ஒழுக வேண்டியவற்றை யடக்கி 'கிராமப் புனருத்தாரணம்' என்னும் விஷயம்பற்றிக் கேட்போர் மனத்தைக் கவரும்படி 1 மணித்தியால நேரமாக ஓர் இனிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

யாவர்க்கும் தலைவர் வந்தனோபசாரம் கூறியபின் 8 மணியளவில் தேவாரபாராயணத்துடன் கூட்டம் நிறைவேறியது.

—காரியதரிசி

## பிரிட்டனின் ஒருதலைப் பட்சமான யோசனை

—

### தனக்கு ருஷியா உதவவேண்டுமாம்

—

ஆனால் தான் ருஷியாவுக்கு உதவுவது பற்றிப் பிரஸ்தாபமில்லை

—

மாஸ்கோ மே 10

அரசாங்கத்தின் செய்தி ஸ்தாபனமொன்று கூறுவதாவது:-

போலந்துக்கும் ருமேனியாவுக்கும் பிரிட்டனும் பிரான்சும் வாக்குறுதியளித்திருப்பது நேயர்களுக்குத் தெரியும்.

அவ்வாக்குறுதியை நிறைவேற்றப் பிரிட்டனும் பிரான்சும் நடவடிக்கை யெடுத்துக் கொள்வதன் மூலம் அவை யுத்தத்தில் இறங்க நேருமாயின் அந்நிலையில் அந்த நாடுகளுக்குச் சோவியத் அரசாங்கம் உடனே உதவி புரிய வேண்டு மென்பதே பிரிட்டிஷ் யோசனை.

கிழக்கு ஐரோப்பாவிலுள்ள வேறுநாடுகள் விஷயத்தில் சோவியத் அரசாங்கத்தார் தங்களுக்குள்ள பொறுப்புகளை நிறைவேற்றுகையில் அவர்களுக்குப் பிரிட்டனும் பிரான்சும் உதவுவது பற்றி அந்த யோசனையில் பிரஸ்தாபிக்கப்படவில்லை.

### ருஷிய மந்திரியுடன் பிரிட்டிஷ் ஸ்தானிகர் பேட்டி

லண்டன் மே 9

மாஸ்கோவிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானிகரான ஸேர். வில்லியம் ஸீட்ஸ் ருஷ்ய அந்நியநாட்டு மந்திரியான மிஸ்டர் மொலொடோவைக் கண்டு பேசிய விவரம் இங்கு கிடைத்திருக்கிறது. அரசாங்கத்தார் அதைக் கவனமாக ஆராய்வார். ஸேர் வில்லியம் ஸீட்ஸ் ருஷ்ய மந்திரியிடம் தெரிவித்த விஷயங்களை ருஷிய அரசாங்கத்தார் கவனமாலோசிப்பரென்றும், அவ்விருவரும் விரைவில் மீண்டும் சந்திப்பரென்றும் இங்கு கருதப் படுகிறது.

## ஓர் ஆகாயக்காட்சி

—

(சனிசாரம்)

வேதாரணியம்
T. S. முத்துக்குமாரசாமி தேசிகர்
எழுதுவது

சனி மேஷாரம்பத்திற்குப் பிரவேச விஷயமாய்ப் பல பாகித பஞ்சாங்கங்களில் பல்வேறு விதமாகக் காணப்படுகின்றன.

ஆனால் சனி கானது சித்திரை மாதம் 14-ந் திகதி (27-4-36) குருவாரம் மேஷாரம்பமாகி விட்டது. அதை நிரூபிக்கிறேன்.

அசுவதி நட்சத்திரத்தின் ரூபதோற்றம் அறிந்தவர்கள் பலருண்டு. அசுவதிதான் மேஷாரம்பம் என்பதும் அறிந்தவர்கள் பலருண்டு. பிரமாதி வருடம் வைகாசி மாதம் 2-ந் திகதி (16-5-39) செவ்வாய்க்கிழமை இரவு 9 மணி 48 நிமிஷத்துக்குச் சுக்கிரஸ்புடம் 0-2-18, சனிஸ்புடம் 0-2-18 இரண்டுக்கும் யுத்தம். சுக்கிரன் வடக்கேயும், சனி தெற்கேயும் நிற்கிறது. சுக்கிரனுக்கு ஜயம். அன்று மாலை 5 மணி 39 நிமிஷத்துக்கு மேஷம் அஸ்தமன ரேகைக்குக் கீழே சென்று விடுகிறபடியால் இக்காட்சி இந்தியா சிலோன் பர்மா முதலிய நாடுகளில் தெரியாது. ஆனால், அன்றிரவு 3 மணி 44 நிமிஷம் 56 கலண்டுக்கு மேஷம் உதயம். சுமார் 5 மணிக்குச் சுக்கிரஸ்புடம் 0-2-40 சனிஸ்புடம் 0-2-19 சனி உதயம் இரவு மணி 3 நி. 52 வி. 51. சுக்கிர உதயம் மணி 3 நி 54 வி 21 இரண்டு உதய ரேகைக்கு மேலே தென்படும் போது சுமார் மணி 5-க்கு வடக்கில் சுக்கிரனையும், தெற்கில் சனியையுங் காணலாம். சுக்கிரன் வடகிழக்காகக் கொஞ்சம் சனியை விடுத்து விலகிக் காணப்படும். இக்காட்சி சந்திரோதயத்திற்குப் பின் தோன்றும். சந்திரனுக்கு வடக்கில் சுமார் 4 பாகைக்குள் குரு இப்படி நிகழப்போவதைச் சென்ற 1938-ம் வருஷம் செப்டம்பர் மாதத்திலேயே இயாழ்ப்பாணம் "இந்துசாதனம்" என்ற பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கிறது. பஞ்சாங்கத் திருத்தம் விஷயமாய் அங்கேதான் தற்போது ஆராய்ச்சி நடப்பதாகத் தெரிந்தபடியால் இலங்கைக்கு மட்டும் அறிவித்தேன்.

T. S. முத்துக்குமாரசாமி தேசிகர்
Astrologer
வேதாரணியம், 7-5-39

—

## மகாத்மாவின் இராஜகோட்டைப் பிரயாணம்

—

### அடுத்த அகில இந்திய காரியநிர்வாகசபைக் கூட்டம்

—

பம்பாய் மே 11

ஸ்ரீஜத் மகாதேவ தேசாய் முதலியோர் சகிதமாக மகாத்மா காந்தி இராஜகோட்டைக்குப் பிரயாணமானார். அன்னை கஸ்தூரிபாய் பம்பாயிலே தங்குகிறார். மகாத்மாவைச் சர்தார் படேலும் மற்றத் தலைவர்களும் வழியனுப்பினார்கள்.

ஜூன்மாதம் மூன்றாவது வாரத்தில் அகில இந்திய தேசியமகாசபைக் காரிய நிர்வாகசபைக் கூட்டம் பம்பாயில் நடைபெறும் என்று தெரிவித்த தந்தி ராஷ்டிரபதி ராஜேந்திரப் பிரஸாத்திடமிருந்து சர்தாருக்கு வந்து சேர்ந்தது. முதலில், குறித்த கூட்டம் ஜூன்மீ முதல் வாரத்திலேயே நடைபெறுதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பம்பாய் அடுத்த கூட்டத்திற்கு மௌலானா ஆஸாத் வருவதற்கு வசதியாக இம்மாறுதல் செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

—

## ஷாங்கையில் அரசியல் நடவடிக்கைகள்

—

### அதிகாரிகள் தடை விதித்திருக்கின்றனர்

—

டோக்கியோ மே 11

ஷாங்கை சர்வதேசப் பகுதியிலும் பிரான்சிய வர்த்தக சிலாக்கியம் பெற்ற பிரதேசத்திலும் சகல அரசியல் நடவடிக்கைகளும் தடைசெய்யும் இணை அறிக்கை ஒன்றை மேற்கூறிய பகுதிகளின் அதிகாரிகள் விடுத்துள்ளார்கள். சமாதானத்தையும் ஒழுங்கையும் நல்ல அரசாங்கத்தையும் பாதிக்கும் நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுகிறவர்கள் பலமாகத் தண்டிக்கப்படுவார்கள் என்று அறிவிக்கிறது.

—

## நீக்ரோ அழகி

அமெரிக்காவில் மியாமி என்னுமிடத்தில் நீக்ரோ பெண்களின் அழகுப் போட்டியொன்று நடைபெற்றது. 6 வெள்ளை பஞ்சாயத்தார் முன்பாக 10 நீக்ரோ பெண்கள் ஸ்நான உடை தரித்து அன்னநடையுடன் நடந்து வந்தனர்.

நீக்ரோ அழகிகளைப் பார்க்க ஆயிரக் கணக்கான நீக்ரோவரும் வெள்ளையரும் வந்திருந்தனர்.

5 அடி 6 அங்குல உயரமும் 115 றாத்தல் கனமுமுள்ள ஈவலாயன் கர்ரி என்னும் நீக்ரோ நடிகை முதல் பரிசான ஒரு வெள்ளிக்கோப்பையும் 25 டாலரும் பெற்றாள்.

—

## சவர்க்காரத்தால் மரணம்

அமெரிக்காவைச் சேர்ந்த மன்ஹாட்டனில் ஜான் லோப்டிக் எனபவர் குளித்துவிட்டு தலை துவட்டத் துண்டு எடுக்க முயலுகையில் எதிர்பாராதவிதமாக மாண்டார்.

ஸ்நானத்தொட்டியிலிருந்துஜோன் இறங்குகையில் ஒரு சோப்புக்கட்டியில் கால் வைத்தார். வழுக்கிச் சமைபல் அறையில் பாய்ந்து ஜன்னல் வழியே ஐந்தாவது மாடியிலிருந்து கீழே விழுந்து மாண்டார்.

—

## சரியான வழி

தமது கொள்கைதான் தேசத்துக்கு நன்மை பயக்கக் கூடியது என முழு மனத்துடன் சுபாஷ் பாபு நம்பியிருந்தாரானால், அவர் செய்ய வேண்டியது என்ன? காங்கிரஸைத் தன்வழிக்குத் திருப்ப முயற்சிக்க வேண்டும். புதுக் கட்சியைத் தோற்றுவித்துத் தேசபக்தர் திருக்கூட்டத்தில் பிளவு ஏற்படுத்துவது சரியல்ல. தேச மக்களின் தேர்தலைப் பொறுத்தது தலைமைப்பதவி. தன் சொந்தப் பலத்தைக்கொண்டு தலைமைப் பதவியைப் புகுத்த முயற்சிப்பது எதிர்பாராதவகையில் தோல்வியையே அளிக்கும்.

—ஹிந்துஸ்தான் டைம்ஸ்

# அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893ம் ஆண்டின் 8ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவுபிடிக்கும் யாழ்ப்பாணம் கோட்டடி மா. து. தெண்டாயுதசுவாமி என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

1938 மார்ச் மாதம்

| நம் | தி. | ரூ. | ச. | |
|---|---|---|---|---|
| M12341 | 1 | 15 | 00 | க, சரவணமுத்து நயினாதீவு பதக்கம் ஒன்று |
| 12379 | 4 | 110 | 03 | க, வயித்திலிங்கம் புங்குடுதீவு பூரான் அட்டியல் 1 தண்டுடன் அரைப்பவுன் 2 |
| 12447 | 8 | 60 | 03 | வி. செல்லையா ஆனைப்பந்தியடி சங்கிலி அட்டியல் 1 கு இ |
| 12449 | 8 | 18 | 00 | நா. விநாசித்தம்பி கந்தர்மடம் பெண்டன் 1 தூப்பி 2 |
| 12453 | 8 | 30 | 03 | ம, ஞானமுத்து நாவாந்துறை முகப்புடன் பவுன் 1 |
| 12492 | 10 | 90 | 00 | வ. கவுத்தீன்பிள்ளை மண்டைதீவு அச்சுக்காப்பு 2 |
| 12512 | 12 | 18 | 03 | ஐ. சிவகாமி கோட்டடி கல்மோதிரம் 1 |
| 12546 | 14 | 25 | 00 | மு. அப்துல்காதர் சோனகதெரு 2பட்டுமணி 1 |
| 12555 | 14 | 11 | 00 | மு. சித்தன் கொட்டடி தூப்பி 2 |
| 12572 | 15 | 58 | 00 | த சரவணமுத்து மண்டைதீவு கூடு 1 சிறுகாப்பு 2 |
| 12580 | 15 | 8 | 03 | வ. ஆறுமுகம் ஆனைக்கோட்டை கல்மோதிரம் 1 |
| 12585 | 16 | 70 | 03 | சு. க. முகமது சமூதீன் சோனகதெரு அலுக்குத்து 25 மணிக்கோர்வை 1 |
| 12587 | 16 | 12 | 03 | க. நூசை நாவாந்துறை பொன்தோடு 2 |
| 12605 | 16 | 16 | 00 | க. சொக்கலிங்கம் அராலி கல்தோடு 2 |
| 12671 | 21 | 275 | 03 | V. Navaratnam அராலி 2பட்டு சந்திராவட்டச்சங்கிலி 1 |
| 12684 | 22 | 29 | 00 | த. பேதுரு நவாலி தாலி 1 தூப்பி 1 |
| 12690 | 22 | 8 | 00 | வா. வுபூபக்கர் சோனகதெரு மணிக்கோர்வை 1 |
| 12701 | 23 | 8 | 03 | ஆ. கதிரவேலு மண்டைதீவு மோதிரம் 1 |
| 12741 | 25 | 60 | 00 | க. சங்கரப்பிள்ளை புங்குடுதீவு மு அட்டியல் 1 கு இ |
| 12772 | 27 | 40 | 03 | க. ஆறுமுகம் கொட்டடி மோதிரம் 1 கல்தோடு 2 தூப்பி 2 |
| 12776 | 27 | 6 | 00 | சி; அன்னம்மா நாவாந்துறை மோதிரம் 1 |
| 12794 | 28 | 66 | 00 | மு. சிந்தன் கொட்டடி பி இல்லாத பொன் கொடி 1 |
| 12800 | 28 | 8 | 00 | வ. பக்கீர் முகைதீன் சோனகதெரு மணிக்கோர்வை 1 |

1938 ஏப்பிரல் ௴

| நம் | தி. | ரூ. | ச. | |
|---|---|---|---|---|
| 12873 | 1 | 6 | 03 | சு. இராமசி கொட்டடி கல்தோடு 2 |
| 12889 | 2 | 300 | 00 | S. முகம்மது மீருசாய்பு சோனகதெரு பூ அட்டியல் 1 அலுக்குத்து 50 காதுப்பூ 2 பொன் சவடி 1 கைச்சங்கிலி 1 |
| 12900 | 2 | 20 | 00 | ச. இராமலிங்கம் அராலி கல்தோடு 2 |
| 12915 | 3 | 10 | 00 | அ. பொன்னாச்சி கொட்டடி தூச்சி 2 தூப்பி 2 |
| 12923 | 4 | 20 | 00 | வே. வி. வேலுப்பிள்ளை சிவன்கோவிலடி தட்டம் 1 |
| 12973 | 6 | 40 | 00 | C. V. காத்திகேசு ஆனைக்கோட்டை சங்கிலி அட்டியல் 2 |
| 12975 | 6 | 10 | 00 | மீ. முகமத் தம்பி சோனகதெரு வேடு 1 மோதிரம் 1 மணிக்கோர்வை 1 அலுக்குத்து 1 |
| 12994 | 7 | 11 | 00 | S. முகைதீன் தம்பி சோனகதெரு அலுக்குத்து 5 |
| 13004 | 7 | 25 | 00 | S. முகம்மது மீராசாகிப்பு சோனகதெரு 2பட்டு மணி 1 |
| 13050 | 10 | 30 | 00 | மா. கதிரவேலு நவாலி சங்கிலி 1 |
| 13067 | 10 | 18 | 00 | ப. சின்னத்தம்பி சோனகதெரு மணிக்கோர்வை 1 |
| 13079 | 11 | 125 | 03 | து. இரத்தினம் கனடாயடி பெங்களூர் கொலிசு 2 |
| 13131 | 12 | 205 | 00 | ஐ. சின்னையர் வட்டுக்கோட்டை மு. கொடி 1 |
| 13157 | 15 | 30 | 00 | கா. முகம்மது மீராசாய்பு சோனகதெரு மணிக்கோர்வை 1 |
| 13162 | 15 | 15 | 00 | இ. சீனியன் சிறுப்பிட்டி கூடு 1 |
| 13184 | 16 | 45 | 00 | ச. கவுரியேல் அல்லப்பிட்டி 2பட்டு கைச்சங்கிலி 1 |
| 13185 | 16 | 12 | 00 | ச. கவுரியேல் அல்லப்பிட்டி கல்மோதிரம் 1 |
| 13200 | 17 | 90 | 00 | பே. செபஸ்தியாம்பிள்ளை கொட்டடி பொன்சவடி 1 |
| 13215 | 18 | 14 | 00 | நா. முருகேசு புங்குடுதீவு கல் கடுக்கன் 2 |
| 13219 | 18 | 20 | 00 | P. ஐந்துரூஸ் சோனகதெரு கைச்சங்கிலி 1 கொப்பு 2 |
| 13238 | 19 | 170 | 03 | ப. பாலபாண்டியல் தெல்லிப்பழை தாலியுடன் மு கொடி 1 |
| 13255 | 20 | 25 | 00 | பி. காசுமுகைதீன் சோனகதெரு 2பட்டு மணி 1 |
| 13266 | 20 | 7 | 00 | சி. Rajadurai ஆனைக்கோட்டை தூச்சி 4 |

விற்பனவு நிகழும் பிரமாதி வருஷம் வைகாசி மா 14-ந் திகதி (28-5-39) ஞாயிற்றுக்கிழமைகாலை 10 மணியளவில் எடுபட்டநகை பிறசிங்கலாக மிருதி மேற்படியாரிடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார் வெந்திஸ் மேஸ்தர்

(Mis 34 11-15-5-39)


## தற்காலச் சரித்திரச் சுருக்கம்

—இலங்கையும் உலகமும்—

**1796 தொடக்கம் இன்று வரையும்**

வித்தியா பகுதியாரால் ஆசிரிய மாணவர் வகுப்புகட்கும் **S. S. C.** வகுப்புகட்கும் சரித்திரமூல கிரந்தமாகக் குறிக்கப்பட்ட "Modern World" எனப்படும் தற்கால உலக சரித்திரமும் இலங்கைச் சரித்திரமும் ஒப்புற நோக்கி எழுதும் முறையில் எழுந்த

### சிறந்த தமிழ்நூல்

கற்கும் விஷயத்தை இலகுவில் ஞாபகத்தில் வைப்பதற்கேற்ற வகையில், காரணகாரிய சம்பந்த முறையாக எழுதப்பட்டதும், மற்றைய நூலிலுங் காணப்பெறாச் சரித்திர உண்மைகள் செறிந்திருப்பதும், எப்பரீட்சையிலும் அயாவி கிற்தும் விடையைத் தன்னகத்தே கொண்டதுமாக விளங்குவது.

இலங்கை, ஐரோப்பா, பிறதேசங்கள் என்ற முப்பிரிவுச் சம்பவங்களையும் காலமுறைப்படி, நூற்றாண்டுகளாக வகுத்துக் காட்டும் அட்டவணைகள் இந்நூலைச் சிறப்பிக்கின்றன.

ஆக்கியோன் **ஆசிரியர் எஸ். பீற்றர்** அவர்கள்.

**256** பக்கங்களையுடையதும், தலைக்கமான உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் அச்சேற்றப் பெற்றதும், அடக்கமானதுமான அழகிய இந்நூல் மாணவர் நயங்கருதி மிகவும் குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது.

விலை ரூபா **1—25**

எல்லாப் புத்தகசாலைகளிலும் பெறக் கொள்ளலாம்.

சண்முகநாதன் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

(Mis. 201 13-3-39— 15-5-39)


## கடைக்கொண்டிருமின் திருக்குறிப்பை

—0—

2-ம் பக்கத் தொடர்ச்சி

நாடு வளர்ந்து வருவது சமயத்தில், எதிர்கால இந்தியநாடு வளர்ந்து முழுகப்போவதும் சமயத்தினாற்றான். எம் நாட்டுச் சரித்திரத்தைப் பாருங்கள். எந்நாட்டுத் தூண்டாமணி விளக்குகள் யார் என்று கவனியுங்கள். நெல்சன், நெப்போலியன் போன்ற இராசதந்திரிகளன்று. அலெக்சாண்டர், கொன்சான்ரின் போன்ற அரசபெருமக்களன்று. சைவ வைஷ்ணவ, மாத்வ சமயப் பெரியார்களே எமது தூண்டாமணி விளக்குகள். அவர்தம் இயக்கங்களே எம் சரித்திரக் குறிப்புகள். அவர் தம்மையே நாம் பெரியாரென்று போற்றுகிறோம். அவர் தம்மையே எம்மை வாழ்விக்க வந்த குருமணிகள் என்று கொண்டாடுகிறோம். அவர் தம் வாழ்வு தெய்வ நம்பிக்கையை அடிப்படையாய்க் கொண்டது. அந்த அவர்தம் நம்பிக்கையே எமக்கும் தெய்வ நம்பிக்கையைத் தந்து அல்லும் பகலும் ஆறுதலளிப்பது. அந்த நம்பிக்கையின் முன்னிலையி லல்லவோ நாம் மனத்தில் எண்ணிய எண்ணங்களும், பின்னிய பின்னல்களும் முடிக்க முடிச்சுக்களும், ஒன்றன்பின் ஒன்றாய்ச் சூரியனைக் கண்ட பனிபோல் ஒழிந்து போகின்றன. போகவே, நாம் ஒரு முகமாய் ஆறுதலாய் இரகசியமாய் அநுபவிக்கு மின்பமல்லவோ உலகமெங்கும் தேடக்கிடையாத உண்மை இன்பம். "சஞ்சலப்படாதே—நம்பிக்கையா யிரு—ஒன்றியிருந்துநினை—காயத்துள்ள முதுவம்—ஊற ஊற நீ காண வேண்டியதைக் கண்டு கொள" என்று ஒன்றன்பின் ஒன்றாய் இடித்திடித்துக் கூறியவப் பண்டைப் பெருமக்களின் பொன்மொழிகள் எங்கே? நாங்கள் எங்கே? அவர் தம்மை மறக்கலாமா? அவர்தம் அடிச்சுவட்டைப் பாராத தொடராத வாழ்வுமொரு வாழ்வா?

அன்பர்களே! குமரி தொடங்கி இமயம் வரைக்கும் ரிஷிகள் வாழ்ந்த நாடு. அந்தப் பெரும் ரிஷி சமூகத்தின் அருள் நோக்கினாற்றான், இன்னும் நாங்கள் அகிம்சையை மேற்கொண்டு இன்பமருந்த, பிறநாட்டவரெல்லாம் பிருகபலத்தை நம்பித் துன்புறுகின்றனர். அதனாற்றான் எத்தனையோ காலமெல்லாம் எத்தனையோ கொடுங் கோலாட்சிகளையும் எத்தனையோ பஞ்சங்களையும் அமைதியாய் ஆறுதலாய் அநுபவித்து வரும் சக்தியைப் பெறலானோம். அப்பெருமக்களுக் காட்டபட்ட மையாற்றான் பிறர்தமக்கில்லா ஒரு சகிப்புத்தன்மையும் எம்பால் அமைந்தது. எமுத்தமப்பெரியாரின் திருவடி பட்டமையாற்றான் எம்நாடு புண்ணிய பூமியாய் ஒன்றொன்றில்லாது விளங்குகிறது. எம்நாட்டில் யுத்தப்பேச்சு நிகழ்வதில்லை, யுத்தமேகம் கவிவதில்லை இட்லர் பிறப்பதில்லை, முஸோலினி தோன்றுவதில்லை. அன்பர்களே! ஐரோப்பாவில உள்ள யுத்தநெருக்கடி எக்காலத்திலாயினும் எம் புண்ணிய நாட்டில் கால்வைக்க முடியுமா? எம் ரிஷிகள் சமூகம் வாளா இருந்துவிடுமா? அது எக்காலத்தும் விழிப்பாயிருக்கிறது. ஆத்மசக்தியின் பெருமையை வரபுறுத்தியவண்ணமாயிருக்கிறது.

ஆத்மசக்தியொன்றிலேயே நம்பிக்கை வைத்துத் தனிப்போக்காய் வளர்ந்து வரும் தேசம் நமது பாரத தேசமேயாம். அதனாலன்றோ மிகவும் பழமை வாய்ந்த எமது நாகரிகம் இன்னும் மிகவும் செழிப்புள்ளதாய் விளங்குகின்றது. ரோமர், கிரேக்கர்முதலியோர் பண்டைக்காலத்தில் நாகரிகம் வாய்ந்த மக்கள் என்று கூறப்படுகின்றனர். அவர்தம் நாகரிகம் ஒரு 800 ஆண்டுகள்தானும் நிலைத்திருக்கவில்லை. வெறும் லௌகிக விஷயங்களையே அடிப்படையாகக் கொண்டு வளர்ந்த நாகரிகம் எவ்வாறுதான் நிலைத்திருக்கும்? தற்காலத்தில் எம்மையெல்லாம் மயக்கும் விஞ்ஞானச் செய்திகள் இவ்வுலகில் பரவி 200 ஆண்டுகள் தானும் ஆகவில்லை. மேற்படி விஞ்ஞான உண்மைகள் அசையத் தொடங்கிவிட்டன. மேனாட்டு விஞ்ஞானிகளே, அவைதம்மை அசைத்து அவைதம் பொய்மையைப் புலப்படுத்துகின்றனர். எனவே தற்கால விஞ்ஞான உலகம் இன்னும் ஒரு 50 ஆண்டுகளுக்காயினும் கூடி

# ஏழரைச்சனி

## SATURN'S CYCLE OF SEVEN AND HALF YEARS.

சந்திர லக்கினத்திலும் அதற்கு முன்னும் பின்னும் (12, 2) மூன்று ராசிகளிலும் சனி சஞ்சரிக்குங் காலம் ஏழரைச் சனியென்று சொல்லப்படும். சனி ஒருராசியிற் சஞ்சரிக்கச் சராசரி $2\frac{1}{2}$ வருடஞ் செல்லுமாகையால் மூன்று (12, லக்கினம், 2) ராசிகளிலுஞ் சஞ்சரிக்க ஏழரை வருடமாகும்.

சந்திரன் சூக்கும சரீர காரகனாகையினால் மற்ற கிரகங்களின் திருஷ்டியிலும் சனியின் திருஷ்டி மிகவும் பிரதானமாகும். பொதுவாகக் கூறுமிடத்து சந்திரன் மனிதனுடைய பிரகிருதியில் மாறுதலடையக்கூடிய அம்சங்களுக்கும், சரீரத்திலே விசைநார் நரம்பு, சவ்வு (Glandular structures and tissues) இவற்றிற்கும் முக்கியமானதாகும். சந்திரன் அண்ட தத்துவத்தில் நிறைந்த பிராணமாய் நிலைத்திருக்கும் என்று நம்புவதற்கில்லை, உண்மை இவ்வாறிருக்க சில கவிஞர் "தற்கால விஞ்ஞான உலகம் எல்லா வசதிகளையும் தருகின்றது தெய்வ நம்பிக்கையென்பது இனிமேல் தேவையில்லை" என்று பிதற்றுவர்.

எங்கே! எங்கள் நகர கிராம பரிபாலன சபைகள் போக்குவரவு புரிய நல்ல வீதிகளையும், உண்டு களிக்கச் சிறந்த உணவுகளையும், களியாட்டிடங்களையும், ஆகாய வசனி நிலையங்களையும் தந்து உதவுகின்றனவே. அமைதியாக இருந்து பார்ப்போர். ஒரு கணமாயினும் இருக்க முடிகிறதா? எல்லா வசதிகளுமுள்ள செல்வர்களன்றோ அமைதியில்லாது சந்தியிலே நின்று அழுபவர்கள். காணவேண்டுமாயின் அமெரிக்காவிற்குப் போமின்கள். அங்கே நிகழும் அளவிலடங்காத தற்கொலை நிகழ்ச்சிகளைக் கவனியுங்கள். அமைதியென்பதின் திப்பணத்தில் மிதக்கும் செல்வர்களே இந்தத் தற்கொலைக்காரரென்று காண்பீர்கள். திருப்தியாக ஒரு கணமாயினும் இருக்கப் பழகாத அச்செல்வர்கள் வேறு என்னதான் செய்ய முடியும்? நம் நாட்டில் பல வசதிகளுமுள்ள செல்வர்கள் படும்பாடு நமக்குத் தெரியாமலில்லை. செல்வன் வீட்டுப் பிள்ளையே இராப்பகலாய் அழுதவண்ணமாயிருக்கிறது. அந்தப் பிள்ளையே காய்கது வறண்டுபோய்த் திருப்தியென்பதைக் கனவிலுங்காண முடியாது தவிக்கிறது. செல்வன் தன் மனைவியோ உலகம் முழுவதையும் விழுங்கிவிட வேண்டும் என்று எண்ணங்கொண்டிருக்கிறாள். தன்னைப் போல் ஒரு பெண் ஜன்மம் இவ்வுலகிலுமில்லை; அவ்வுலகிலுமில்லை; இக்காலத்திலுமில்லை; அக்காலத்திலுமில்லை என்றும் நினைத்து விடுகிறாள். அதனால் அமைதியைக் காணாது தவிக்கிறவளாகிறாள். சுருங்கக் கூறின், எல்லா வசதிகளுமுள்ள செல்வர்களுக்கு அமைதி இன்பத்தைக் காணும் வசதி மாத்திரம் இல்லாது போய்விடுகிறது.

ஆதலின், மேனாட்டிலிருந்து வாநின்ற வாங்கிப் பெருக்கி எத்துணை முயன்றாலும் நாம் பெறும் பயன் ஒன்றுமில்லை. தற்கால உலக வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாத சிற்சில வசதிகளுடன் எம்முன்னோர் தம் அடிச்சுவட்டைப் பின்பற்றி, அவர்தம் வாழ்வை எம் வாழ்வில் வெளிப்படுத்தோன்றும்படி, எம் தந்தை தாயரின் உண்மைப் புதல்வர்களாய் அமைதியாய்ச் சுகமாய் இருக்கப் பழகுதல் வேண்டும். அதற்குத் தெய்வ நம்பிக்கையொன்றே இன்றியமையாதது; அந்தத் தெய்வ நம்பிக்கையின் சிறப்பை எம் பண்டைப் பெருமக்களைப்போல், தென்னாட்டவர்க்கும் எந்நாட்டவர்க்கும் அறிவுறுத்தி, ஆண்டவனால் எமக்கெனத் தரப்பட்ட அத்தப்பணியை நாங்கள் அன்புடன் ஆற்றி வருவோமாக.

ஞான வாள் ஏந்தும் ஐயர்
நாதப் பறையறைமின்
மானமா ஏறும்ஐயர்
மதிவெண் குடைகவிமின்
ஆனநீற் றுக்கவசம்
அடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோம்நாம்
மாயப்படை வாராமே.

—திருவாசகம்

மனோ சூரியனிடத்திலிருந்து ஒவ்வொரு ஆத்மாவுக்கும் பரவச் செய்யும் கருவியாகும். பாபக்கிரகமாகிய சனி தீயதன்மைகளைச் சேர்த்து வைக்குங் கிரகமாகும். அதன் இயல்பு குளிரச் செய்தல், அதன் செய்கை பந்தப்படுத்துதல் அல்லது கட்டுப்படுத்துதலாகும். ஆகவே சந்திரன் சனியின் அசுப திருஷ்டியைப் பெறுவதால், பிராண சக்தி தடைப்பட்டு மனிதனது மூன்று முக்கிய பகுதிகளாகிய சரீரம், உணர்ச்சி மனம் ஆகியவைகள் நலிவுறுகின்றன.

முற் கூறிய இராசிகளில் சனி சஞ்சரிக்கும் பொழுது அடையப்படுங் கஷ்டங்கள் காலத்துக்குக் காலம் வித்தியாசமாகவே இருக்கும். சனி பன்னிரண்டாவது ராசியிற் சஞ்சரிக்கும்பொழுது பிராணபயமும் நினைத்த காரியங் கைகூடாமையும், ஞாபகக்குறைவும், நித்திரையின்மையும், கை கால் முடக்கமும், பெற்றோர் அல்லது மனைவி மக்களுக்குப் பிணியும். சனி சந்திரலக்கினத்திற் சஞ்சரிக்கும் பொழுது கவுரபங்கமும் வித்தியாசப்படுதலும், பெரியோர்களால் நிந்திக்கப்படுதலும், தன நாசமும், ஆயுதபீடையும் முயற்சிகளுக்குப் பங்கம் வருதலும், தேகமெலிவும், தீராரோய்வாய்ப் படுதலும், சினேகிதர்களை வெறுத்தலும்; சனி இரண்டாவது இராசியிற் சஞ்சரிக்கும் பொழுது பணக்கஷ்டமும், பகைவர்களாற் தீங்கும், வருவாய் குறைதலும், திதானந் தவறுதலும், சாத்திரப் பிரகாரங் கஷ்டங்கள் சம்பவித்தலும், முயற்சி சித்தியடையாமையும், வியச்சியத்தி வீடுபடுதலும் விரைத்திறற் பிடையும் நேரும்.

சந்திரனுக்கு எட்டாவது ராசியிற் சனி சஞ்சரிக்கும்பொழுது அட்டமத்துச் சனியென்று கூறப்படும். இதுவும் ஏழரைச் சனியையொத்த பலனையுடையதாகும். இவ்விதமான துன்பங்கள் நிகழவேண்டி நேர்ந்தாலும், ஜாதகப்படி தசாநாதன் புத்திநாதன் பெலம் பெற்று நல்ல ஸ்தானங்களிலிருந்தால் மேற்கூறிய பலன்கள் குறைவாகவே நிகழும்.

சனி ஒரு ராசியிற் சஞ்சரிக்க $2\frac{1}{2}$ வருடகாலமாதலால் 12 ராசிகளையும் கடத்தற்கு முப்பது வருஷங்களாகும். ஆகவே ஏழரைச்சனி 30 வருடங்களுக்கு ஒருமுறையே சம்பவிக்கும்.

நிகழும் சித்திரை௴ 14௳ சனி மேடராசியிற் சென்றுவிட்டதால் அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால் இவற்றிற் பிறந்தவர்களுக்கு ஏழரைச் சனியும்; மகம் பூரம் உத்தரத்து முதற்கால் இவற்றிற் பிறந்தவர்களுக்கு அட்டமத்துச்சனியும் அன்றே கழிந்துவிட்டன என்பதும், கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை இவற்றிற் பிறந்தவர்களுக்கு ஏழரைச் சனியும், உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரைமுன்னரை இவற்றிற் பிறந்தவர்களுக்கு அட்டமத்துச்சனியும் அன்றே தொடங்கிவிட்டனவென்பதும் அறியத்தக்கன.

இன்னும் சனி மேடராசியிற் சென்றதைப் பிரத்தியட்சத்திற்காண விரும்புவோர் நிகழும் பிரமாதி௵ வைகாசி மாசம் 2ந் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 4 மணி 8 நிமிஷந் தொடக்கம் விடியும்வரையும் கிழக்கு வானத்தில் சந்திரனுக்குத் தெற்கே 3 பாகையில் சுக்கிரனும், சுக்கிரனுக்குத் தெற்கே ½ பாகையில் சனியும் வடக்குத் தெற்காக ஒரே ரேகையில் நிற்றலைக்காணலாம். சந்திரனுஞ்சுக்கிரனும் அன்று மேடராசியில் இருப்பது உண்மையாகவே, அதனுடன் ஒரே பாகையில் இருக்கும் சனியும் மேடராசியிலென்பதும் மறுக்கொணாவுண்மையாகும். ஆதலால், இந்திய இலங்கையிலுள்ள திருக்கணித பஞ்சாங்கங்களின் படியும், கொழும்பிலுள்ள சிங்களப் பஞ்சாங்கங்களின்படியும் சனி மேடராசிக்குச் சித்திரை௴ 14ந்திகதி சென்றுவிட்டதென்பதை யாவரும் அறியக் கடவர்.

சி. சுப்பிரமணிய ஐயர்,

12-5-39.

ஜோதிஷ ரத்னா நிலையம்,
மட்டுவில்.




# கேரள வெப் சோப்

சருமத்திற்கு உற்சாகம் விளைக்கக் கூடிய உயர்தரமானது

அழகான பெண்களுக்குரிய சோப்

எங்கும் கிடைக்கும்

ஏஜென்ஸ்: தேவார் அன் கம்பனி, 57, மெயின் ஸ்ரீட், கொழும்பு.

Mis 159, 17-11-38—



### விளம்பரம்

கோலாலம்பூர்விவேகானந்த தமிழ்வித்தியாசாலைக்குப் பயிற்றப்பட்ட தாரதரப் பத்திர முடைய ஓர் ஆசிரியர் தேவை. இவர் ஆங்கிலமுங் கற்பிக்கக் கூடிய அறிவுடையவராயிருத்தல் வேண்டும். ஆச்சிரமத்தில் சமயபாட வகுப்பும் நடத்தக் கூடிய சமய அறிவுடையோராயிருப்பின் உத்தமம்.

வேண்டுவோர் போதிய விபரங்களுடன் மேற்காணும் விலாசத்திற்கு மனுப் பத்திரங்களை 31-5-39 க்குள் அனுப்புக.

வை. பொன்னுத்துரை,
"பூமனை", சுன்னாகம்,
5—5—39

Mis 30 8—15—5—39


№ 375


## சுகபோகமான ஸ்நானத்திற்கு — ஸிப்ரா

டொயிலெற் சவர்க்காரம்



சிறந்தது எது என்று கண்டு பிடிக்கும் பொது ஜனங்களுக்கு இதுவரை எவரும் தர முன்வராத மிகச் சிறந்த சவர்க்காரம்;

சரீரத்தி லுள்ள தோஷச் சுத்த மாக்குகின்றது; மென்மை யாக்கு கின்றது; வசமாகுந் தன்மையும் வசீகரமுமடையச் செய்கின்றது.

பெங்கால் கெமிக்கல் & பாமகோட்டிக்கல் லிமிற்றெட்

கல்கத்தா: பம்பாய்.

இலங்கை ஸோல் ஏஜன்டுகள்: தி யூணற்றெட் ட்ரேடிங்கம்பெனி, தபாற்பெட்டி 377, கொழும்பு.

Mis159. 10-9-37—



## N. வைத்திலிங்கம் & கம்பெனி

பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

கட்டிடங்களுக்கு வேண்டிய முதல்தரமான சாமான்கள் ஜெர்மனி, ஜப்பான், டச்சு முதலிய இடங்களில் செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள சிமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள் வர்ணங்கள், வார்ணிஸ், கொழுக்கி ஓடுகள் இன்னும் கட்டிடத்திற்குரிய சகலசாமான்களும் எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால் சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE
38, 3rd Cross Street,
Colombo

Telephone No. 30.

(Y 65 1-4-38—31-3-39)


நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினை
என்றுஞ் சிவன்றாள் இணை


## சாலாமிஸ்திரி லேகியம்

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாளு, சாலாமுன்லி, சப்பேமுச்லிலி பிஸ்தான், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை நாகப்பூ, லக்கபஸ்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயதாக்ரசெந்தூரம், சாம்பிராணி பதக்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருடைத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டு வந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா 20. அரை ரூத்தலுக்கு ரூபா 10. கால்ரூத்தலுக்கு ரூபா 5. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததனால் முன் மணி ஆடர் அனுப்புதல்வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
வீட்டுஇலக்கம் 33, பழையவாடிரோட்டு, கோட்டமுனை, மட்டக்களப்பு, சிலோன்.

(Y. 64. 1-1-39 to 31-12-39.)



# யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலதிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா 134,36700

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த கால்முடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக் கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம். காணி ஈடாக வைத்துக் கொண்டு பிணையுடன் கடன் எடுக்கலாம். (இந்தக்கடனையும்) பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாம்.

இன்னும் வேண்டிய விடயங்களை எள்மூலமாக அறிந்து கொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

225. 21-11-38—20-11-39


## தீப்பற்றிய கப்பல்

—:—

பிரயாணிகளும் மாலுமிகளும் உயிர் மீட்கப்பட்டனர்

—

எரிந்துகொண்டேகடலில் மிதந்து வருகிறது

—

கொழும்பு மே 10—

'அல்லியர' என்ற டேனிஷ் கப்பலில் நேற்றிரவு விபத்து ஏற்பட்டிருப்பதாக ஒரு தகவல் கிடைத்திருக்கிறது. இக்கப்பல் பாங்காங்கிலிருந்து பிரயாணிகளுடனும் சாமான்களுடனும் கோபன் ஹேகனுக்குச் சென்றுகொண்டிருக்கிறது. நேற்று இக்கப்பல் கொழும்புவந்து சேர வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது கொழும்புக்கு எதிரிலுள்ள பார்பெரியன் தீவிற்குத் தெற்கே 20 மைல் தூரத்தில் வந்துகொண்டிருக்கும் போது இதில் தீவிபத்துநேரிட்டிருப்பதாகவும் உதவி வேண்டுமென்றும் பன்முறை வேண்டுகோட்கள் வந்தன இதனால் இன்று வரவேண்டிய காண்டன் என்றகப்பல் இக்கப்பலின் உதவிக்காகச் சென்றிருக்கிறது. இக்கப்பலுக்கு மீட்பு வேலையில் உதவிபுரிய கிராண் காப்பர் என்ற பிரக்கிப்படகும் போயிருக்கிறது' தீ அணைக்கப்பட்டுவிட்டதாகக் கடைசியாக வந்த தகவல் கூறுகிறது.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Monday, May 15th.